www.tamilarangam.net

# ஐரோப்பியர் பார்வையில் இலங்கை



நா.மயில்வாகனம், B.A HONS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பியர் பார்வையில் இலங்கை

**நா. மயில்வாகனம்**
[பீ. ஏ. ஆர்னஸ்]
பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முதற்பதிப்பு டிசம்பர் 1974
First Edition: 1974
உரிமைபதிவு

# CEYLON THROUGH EUROPEAN EYES.

*(A Synopsis)*

*N. MYLVAGANAM B. A. (Hons)*

விலை ரூபா: 3-60

அச்சுப்பதிப்பு
லங்கா அச்சகம்,
. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## முன்னுரை

இலங்கையைப் பற்றி எழுதிய நான்கு ஐரோப்பியர்களது நூல்களும், பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது அல்லது எழுதி முடிக்கப்பட்டது, ஒரு குறிப்பிட்ட பதினைந்து ஆண்டுகளுக்குள்ளேயே என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இவர்களுள் போர்த்துக்கீசரான குவைறொஸ் சுவாமிகளைவிட ஒல்லாந்தவரான வண.பிலிப்பு பால்தேயு, ஆங்கிலேயரான றொபேட் நொக்ஸ், போர்த்துக்கீசப் படைத் தலைவனான றிபேறியோ ஆகியோர் இலங்கையில் பல வருடங்கள் வாழ்ந்து நாட்டைவிட்டுச் சென்றதும் இந்நூல்களை எழுதியுள்ளனர்.

நொக்ஸ் பத்தொன்பது வருடங்களும், றிபேறியோ பதினெட்டு வருடங்களும், பால்தேயு எட்டுவருடங்களும் இலங்கையில் வாழ்ந்துள்ளனர். குவைறொஸ் சுவாமிகள் மட்டும் இலங்கைக்கு வரவில்லை.

பதினேழாம் நூற்றாண்டில் இலங்கை புவியியல் சமூக அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கரையோர மாகாணங்களில் றிபேறியோவும், கண்டியிராச்சியத்தில் நொக்சும், வடபகுதியில் பால்தேயுவும் வாழ்ந்து அவ்வப்பகுதிகளை ஆராய்ந்து எழுதியுள்ளனர்.

பால்தேயு இலங்கைக்கு மதச்சேவை செய்யவந்த மூன்றும் ஆண்டு றிபேறியோ யுத்தக் கைதியாக பற்றேவியாவிற்கு அனுப்பப்பட்டார். றிபேறியோ நாட்டை விட்டுச் சென்ற அடுத்த ஆண்டிலேயே றொபேட்நொக்ஸ் இலங்கையில் கைதியாக்கப்பட்டார். குவைறொஸினது நூலில் றிபேறியோவின் பெயர்கூடக் குறிப்பிடாதமை வியப்பிற்குரியதாகும்.

நான்கு நூல்களில் நொக்ஸினதும் பால்தேயுவினதும் உடனடியாக வெளியிடப்பட்டன. றிபேறியோவினது நூல் 1836-ம் ஆண்டிலும் குவைறொஸினது நூல் 1916-ம் ஆண்டிலும் வெளியிடப்பட்டன.

இந் நூல்கள் இலங்கையின் சமூக சமய பொருளாதார வரலாற்றை அறிய விரும்புகிறவர்களுக்கும், பிரயாணக் கதைகளில் ஆர்வமுள்ளவர்களுக்கும் விருந்தாகவுள்ளன. மாணவர்கள் மத்தியில் இந்நூல்களை அறிமுகப்படுத்தி ஆராய்வு மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்துடனேயே இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

மாணவர்களின் நன்மையைக் கருதி ஒவ்வொரு நூலுக்கும் ஆசிரியர் அறிமுகம், நூலின் அமைப்பு பற்றிய விளக்கம், மதிப்பீடு என்பனவற்றைத் தொகுத்துச் சுருக்கமாக எழுதியுள்ளேன். நூலின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்மையையும் ஆசிரியரின் நடையையும் விளங்கிக் கொள்வதற்காகச் சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் தரப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு அணிந்துரைகள் வழங்கிய இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பி. பஸ்தியாம் பிள்ளை அவர்களுக்கும், எமது கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம் பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி உரியது. பதிப்பாலோசனைகள் வழங்கிய யாழ்ப்பாண வளாகத் துணை நூலகர் நண்பன் ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளைத் திருத்தியுதவிய ஆசிரிய நண்பர்கள் செ. கணபதிப்பிள்ளை, க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நூலில் காணப்படும் சில சொற்பிரயோக அச்சுப் பிழைகளை அடுத்த பதிப்பில் திருத்தியமைப்பதுடன் தெரிவிக்கப்படும் கருத்துக்களை நன்றியுடன் வரவேற்கின்றேன். இந்த நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீ லங்கா பதிப்பகத்தாருக்கு எனது நன்றி உரித்தாகுக.

பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
5-12-1974.

நா. மயில்வாகனம்

---

○ யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தருக் கெதிராக நடைபெற்ற சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுத் தண்டனைகள் வழங்கப்பட்ட முறையினை முன் அட்டையில் உள்ள சித்திரம் விளக்குகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் ஒல்லாந்தர் நாகபட்டினத்திற்குப் படையெடுத்துச் சென்ற போது யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள ஒல்லாந்தரைக் கொன்று கோட்டையைத் திரும்பவும் கைப்பற்றச் சதித்திட்டம் உருவாக்கப்பட்டது.

சதித்திட்டத்தை உருவாக்க மூலகர்த்தாக்களாக விளங்கிய டொன் லூயிஸ், மன்னாரைச் சேர்ந்த ஒருவர், போர்த்துக்கீசர் ஒருவர், தண்டனையளிக்க உபயோகிக்கப்படும் சட்டத்தில் பிணைக்கப்பட்டு கோடரியினால் முதலில் தொண்டையிலும், பின்னர் மார்பிலும் வெட்டப்பட்டனர். பின்னர் அவர்களது இருதயம் வெளியே எடுக்கப்பட்டு அவர்களின் நம்பிக்கைத்துரோக முகங்களில் செலுத்தப்பட்டது. சதித்திட்டத்தில் பங்குபற்றியவர்களில் பதினொரு பேர் தூக்கிலிடப்பட்டனர். மற்றையவர்கள் நாடுகடத்தப்பட்டனர்.

(பிலிப்பு பால்தேயுவின் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

யாழ்ப்பாணம், பரியோவான் கல்லூரி அதிபர்

திரு. க. பூரணம்பிள்ளை அவர்கள்

வழங்கிய

## மதிப்புரை

எனது கருத்துப்படி திரு. நா. மயில்வாகனம் அவர்கள் எழுதிய ''ஐரோப்பியர் பார்வையில் இலங்கை'' காலத்திற்கேற்றதும் உபயோகமானதுமாகும். ஜி.சி.ஈ. உயர்தரவகுப்பில் வரலாற்றைக்கற்கும் மாணவர்கள் தகவல்தேட்ட நூல்களை மூலமொழிகளின் மொழியை நன்கு தெரியாமையால் பயன்படுத்துவதில்லை. ஆங்கில மொழிபெயர்ப்புகளும் தமிழ் மொழிமூலம் கற்கும் மாணவர்களின் அறிவுக்கு ஏற்றதாக அமையவில்லை. தமிழில் எழுதப்பட்ட இந்நூல் தேவைக்கேற்ற விதத்தில் அமைந்துள்ளது. நொக்ஸ், பால்தேயு, றிபேறியோ குவைறொஸ் ஆகியோரின் நூல்களிலிருந்து தேவையான சுருக்கங்கள் தரப்பட்டுள்ளன.

உயர்தரவகுப்பு மாணவர்கள் தகவல் தேட்ட நூல்களை மதிப்பிடவும், அவற்றின் உண்மைகளை அறியவும், நம்பத்தகு தன்மையை அளவிடவும் ஒவ்வொரு நூலாசிரியர் பற்றிய திரு. மயில்வாகனம் அவர்களின் முன்னுரை உதவியாக அமைந்துள்ளது.

பரீட்சைக்குரிய பாடங்களைக் கற்காத மாணவர்களும் இந்நூலில் தரப்பட்டுள்ள சுவையான பகுதிகளை வாசிப்பதன்மூலம் தமது பிறந்த நாட்டினைப்பற்றிக் கூடிய விபரங்களை அறியக் கூடியதாக இருப்பதைக் காணலாம்.*

இந்நூலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுவாசகர்களுக்கும் இதயபூர்வமாகச் சிபார்சு செய்கிறேன்.

* [மறுபக்கத்தில் இந்நூலிலிருந்து தெரிந்து தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுச் சுருக்கங்களைப் பார்வையிடவும்.]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்மையையும் ஆசிரியரின் நடையையும் விளங்கிக் கொள்வதற்காகச் சில பகுதிகள் மொழிபெயர்க்கப்பட்டு ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் தரப்பட்டுள்ளன.

இந்நூலுக்கு அணிந்துரைகள் வழங்கிய இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்பு வளாகச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பி. பஸ்தியாம் பிள்ளை அவர்களுக்கும், எமது கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம் பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி உரியது. பதிப்பாலோசனைகள் வழங்கிய யாழ்ப்பாண வளாகத் துணை நூலகர் நண்பன் ஆ. சிவநேசச்செல்வன் அவர்களுக்கும், எழுத்துப் பிழைகளைத் திருத்தியுதவிய ஆசிரிய நண்பர்கள் செ. கணபதிப்பிள்ளை, க. உமாமகேஸ்வரம்பிள்ளை அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நூலில் காணப்படும் சில சொற்பிரயோக அச்சுப் பிழைகளை அடுத்த பதிப்பில் திருத்தி யமைப்பதுடன் தெரிவிக்கப்படும் கருத்துக்களை நன்றியுடன் வரவேற்கின்றேன். இந்த நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட ஸ்ரீ லங்கா பதிப்பகத்தாருக்கு எனது நன்றி உரித்தாகுக.

பரியோவான் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
5-12-1974.

நா. மயில்வாகனம்

---

○ யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தருக் கெதிராக நடைபெற்ற சதித்திட்டம் முறியடிக்கப்பட்டுத் தண்டனைகள் வழங்கப்பட்ட முறையினை முன் அட்டையில் உள்ள சித்திரம் விளக்குகின்றது.

யாழ்ப்பாணக் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் ஒல்லாந்தர் நாகபட்டினத்திற்குப் படையெடுத்துச் சென்ற போது யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள ஒல்லாந்தரைக் கொன்று கோட்டையைத் திரும்பவும் கைப்பற்றச் சதித்திட்டம் உருவாக்கப்பட்டது.

சதித்திட்டத்தை உருவாக்க மூலகர்த்தாக்களாக விளங்கிய டொன் லூயிஸ், மன்னாரைச் சேர்ந்த ஒருவர், போர்த்துக்கீசர் ஒருவர், தண்டனையளிக்க உபயோகிக்கப்படும் சட்டத்தில் பிணைக்கப்பட்டு கோடரியினால் முதலில் தொண்டையிலும், பின்னர் மார்பிலும் வெட்டப்பட்டனர். பின்னர் அவர்களது இருதயம் வெளியே எடுக்கப்பட்டு அவர்களின் நம்பிக்கைத்துரோக முகங்களில் செலுத்தப்பட்டது. சதித்திட்டத்தில் பங்குபற்றியவர்களில் பதினொரு பேர் தூக்கிலிடப்பட்டனர். மற்றையவர்கள் நாடுகடத்தப்பட்டனர்.

(பிலிப்பு பால்தேயுவின் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

யாழ்ப்பாணம், பரியோவான் கல்லூரி அதிபர்

திரு. க. பூரணம்பிள்ளை அவர்கள்

வழங்கிய

## மதிப்புரை

எனது கருத்துப்படி திரு. நா. மயில்வாகனம் அவர்கள் எழுதிய ''ஐரோப்பியர் பார்வையில் இலங்கை'' காலத்திற்கேற்றதும் உபயோகமானதுமாகும். ஜி.சி.ஈ. உயர்தரவகுப்பில் வரலாற்றைக்கற்கும் மாணவர்கள் தகவல்தேட்ட நூல்களை மூலமொழிகளின் மொழியை நன்கு தெரியாமையால் பயன்படுத்துவதில்லை. ஆங்கில மொழிபெயர்ப்புகளும் தமிழ் மொழி மூலம் கற்கும் மாணவர்களின் அறிவுக்கு ஏற்றதாக அமையவில்லை. தமிழில் எழுதப்பட்ட இந்நூல் தேவைக்கேற்ற விதத்தில் அமைந்துள்ளது. நொக்ஸ், பால்தேயு, றிபேறியோ குவைறோஸ் ஆகியோரின் நூல்களிலிருந்து தேவையான சுருக்கங்கள் தரப்பட்டுள்ளன.

உயர்தரவகுப்பு மாணவர்கள் தகவல் தேட்ட நூல்களை மதிப்பிடவும், அவற்றின் உண்மைகளை அறியவும், நம்பத்தகு தன்மையை அளவிடவும் ஒவ்வொரு நூலாசிரியர் பற்றிய திரு. மயில்வாகனம் அவர்களின் முன்னுரை உதவியாக அமைந்துள்ளது.

பரீட்சைக்குரிய பாடங்களைக் கற்காத மாணவர்களும் இந்நூலில் தரப்பட்டுள்ள சுவையான பகுதிகளை வாசிப்பதன்மூலம் தமது பிறந்த நாட்டினைப்பற்றிக் கூடிய விபரங்களை அறியக் கூடியதாக இருப்பதைக் காணலாம்.*

இந்நூலை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொதுவாசகர்களுக்கும் இதயபூர்வமாகச் சிபார்சு செய்கிறேன்.

* [மறுபக்கத்தில் இந்நூலிலிருந்து தெரிந்து தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டுச் சுருக்கங்களைப் பார்வையிடவும்.]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**நொக்ஸ்:**

கணவன் உண்ணும்போது மனைவியே பரிமாறுவாள்; மனைவி கணவனுடன் சேர்ந்து உண்பதில்லை. கணவன் உண்ட பாத்திரத்தில் எஞ்சியதையே மனைவி உண்பாள். சாப்பிடும்போது அதிகமாகக் கதைப்பதில்லை.
(பக்கம் 14)

இறந்தவர்களுக்காகப் பெண்கள் புலம்பும்போது தலைமயிரைக் குலைத்துக் கீழே தொங்கவிட்டு இரு கைகளையும் தலைக்குப் பின்னால் வைத்துக்கொண்டு பயங்கரமான சத்தத்துடன் இறந்தவர்களின் பெருமையைக் கூறி அழுவார்கள்.
(பக்கம் 15)

**பால்தேயு:**

யாழ்ப்பாணப் பகுதியில் திருமண வயதுள்ள பெண் அல்லது ஆண் பெற்றோர்களின் அனுமதியில்லாமல் ஒன்று கூடுவதற்குச்சம்மதிக்கமாட்டார்கள். இது மிகவும் புகழ்ச்சிக்குரியதாகும்.
(பக்கம் 27)

கணவனும் மனைவியும் ஒருமித்து உண்பதில்லை. கணவன் உண்ட பின் மனைவி தனித்து உண்பாள்.
(பக்கம் 28)

**றிபேறோ:**

சிங்களவர்கள் பணத்தில் பேராசை கொண்டவர்கள். இதனால் நம்பிக்கைத் துரோகமுடையவர்களாயுள்ளனர். இந்நோக்கத்துடனே கிறிஸ்தவமதத்தைப் பின்பற்ற முன்வந்தாலும் பின்னர் தமது மதங்களையே பின்பற்ற முயல்வர்.
(பக்கம் 37)

காடுகளில் போதியளவு உணவைப் பெறுவதினால் விவசாயம் செய்வதில் சோம்பேறிகளாகவுள்ளனர். உப்பு மட்டுமே அவர்களுக்கு அருமையாகவுள்ளது.
(பக்கம் 38)

**குவைறோஸ்:**

சிங்களவர்கள் கர்வமுள்ளவர்கள், ஆடம்பரமானவர்கள் சோம்பேறிகள். அவர்கள் தங்களைத் தேவலோகத்திய வம்சத்தவர்களெனவும், பண்டைய அரசவம்சத்தினரெனவும் எண்ணுபவர்கள். (பக்கம்48)

போர்வீரர்கள் குழந்தைகளை ஈட்டிமுனைகளில் எறிந்து ஏந்தி அக்குழந்தைகளின் அழுகுரலையும் பரிதாபத்தையும் பாராது கொன்றனர். ஆண்களை மல்வானைப் பாலத்திலிருந்து ஆற்றில் எறிந்து கொன்றனர்.
(பக்கம் 49)

இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாக
வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு. பி. பஸ்தியாம்பிள்ளை அவர்கள்
வழங்கிய

## அணிந்துரை

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் ஆசிரியராகவுள்ள திரு. நா. மயில்வாகனம் அவர்கள் இந்நூலில் இலங்கையில் நான்கு ஐரோப்பியர்கள் தாம் வாழ்ந்த காலத்தைப்பற்றித் தெரிவித்த அபிப்பிராயங்களை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். ஸ்கொத்லாந்து, ஒல்லாந்து, போர்த்துக்கல் நாட்டவர்களால் எழுதப்பட்ட இந்நூல்கள் போர்த்துக்கீசர் ஒல்லாந்தர் ஆதிக்கத்தின் கீழ் விளங்கிய இலங்கையின் கரையோர மாகாணங்களின் அரசியல், சமூக, பொருளாதார கலாச்சார நிலைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்குரிய அடிப்படையான மூலாதார ஏது நூல்களாகவுள்ளன. பலமுறை அடிபணிய வைக்கமுயன்றும் சுதந்திரமாக விளங்கிய கண்டியிராச்சியத்திற்கும் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையேயும் நிலவிய தொடர்புகளின் விபரங்களையும் அறியத்தருகின்றன. இவ்வகையில் நொக்ஸினது நூல் அடைபட்டுக் கிடந்த கண்டியிராச்சிய நிலைமைகளை அறிவதற்குரிய நிச்சயமான அத்தியாவசியமான நூலாக விளங்குகின்றது.

திரு. நா. மயில்வாகனம் அவர்கள் அத்தியாவசியமான அறிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராய்வதில் அதிக நேரத்தையும் சிரமத்தையும் பாராது பயன்றுள்ளார். இந்நூலில் தனது உழைப்பின் பெறுபேறுகளைப் புத்தெளிர்வையாகவும் விளங்கக் கூடியதாகவும் விமர்சனக் கண்ணுடனும் சிறந்த நடையிலும் எழுதியுள்ளார்.

இந்நூல் வரலாற்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அத்தியாவசியமானதாக இருப்பதுடன் இலங்கையின் வரலாற்றை அறிய விரும்புகின்றவர்களுக்கும் ஏற்றதாக அமைந்துள்ளது. நான் அறிந்த மட்டில் இத்தகைய பெறுமதிவாய்ந்த பயனுள்ள முயற்சி முன்னொருபோதும் தமிழில்மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே இத்தகைய சிறந்த நூலை ஆக்கியமையால் திரு. மயில்வாகனம் அவர்கள் எல்லோருடைய புகழ் மொழிக்கும் நன்றிக்கடனுக்கும் உரியவராகின்றார்.

இலங்கை வரலாற்றைத் தமிழ்மொழி மூலம் அறிய விரும்புவோருக்கு இப்படைப்பு ஓர் சிறந்த நூலென நான் மகிழ்ச்சியுடன் சிபார்சு செய்கிறேன். திரு. மயில்வாகனம் அவர்கள் தமது முயற்சிகளைத் தொடர்ந்து இலங்கையில் பிரித்தானியர் காலச் சமகால வரலாற்றை ஆராய்ந்து அறிந்து பணிபுரிவாரென நம்புகின்றேன்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | iii |
| மதிப்புரை | v |
| அணிந்துரை | vii |
| 1. இலங்கையுடனுன வரலாற்றுத் தொடர்பு — ருெபேட் நொக்ஸ் | 1 |
| 2. ருெபேட் நொக்ஸின் நூலிலிருந்து...... | 11 |
| 3. இலங்கைத்தீவின் உண்மையான, நிச்சயமான வருணனை — பிலிப்பு பால்தேயு | 16 |
| 4. பால்தேயுவின் நூலிலிருந்து... .. | 26 |
| 5. இலங்கைத்தீவின் வரலாற்றுத் துன்பியல் நாடகம் — யோ றிபேறியோ | 29 |
| 6. றிபேறியோவின் நூலிலிருந்து...... | 37 |
| 7. இலங்கையை ஆத்மீக இலௌகீகத்துறையில் வெற்றிபெறல் — பெனுன்டி குவைருெஸ் | 40 |
| 8. குவைருெஸின் நூலிலிருந்து...... | 48 |


# இலங்கையுடனுன வரலாறுத் தொடர்பு

— ருெபேட் நொக்ஸ் —

ருெபேட் நொக்ஸ் எழுதிய இந் நூல் பதினேழாம் நூற்றுண்டின் இலங்கையின் சமூக பொருளாதார வரலாற்றை அறிய உதவி நூலாகவுள்ளது. இந் நூல் இலண்டனில் 1681-ம் ஆண்டு முதலில் பிரசுரிக்கப்பட்டது. ருெபேட் நொக்ஸின் காலத்திலேயே ஒல்லாந்து, ஜேர்மன், பிரெஞ்சு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. ஆனல் தொடர்ந்து இரண்டரை நூற்றுண்டுகளாக இந் நூல் மதிப்பிழந்து காணப்பட்டது.

பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனியின் மாலுமியாக விளங்கிய ருெபேட் நொக்ஸ் 1660-ம் ஆண்டு கண்டிய மன்னன் இரண்டாம் இராசசிங்கனுல் கைதியாக்கப்பட்டு இருபது வருடங்கள் கண்டி இராச்சியத்தில் வாழ்ந்தார். கண்டியிராச்சியத்திலிருந்து தப்பியோடியவுடன் கண்டியிராச்சியத்தைப் பற்றியும் தனது அனுபவத்தைப் பற்றியும் இந் நூலில் விபரித்துள்ளார். இறந்த ஏது நூலாகவும் பிரயாணக் கதையாகவும் அமைந்துள்ளதால் இந் நூல் பெரிதும் பயனுடையதாக அமைந்துள்ளது.

ருெபேட் நொக்ஸ் 1641-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ந் திகதி பிறந்தார். இளமையில் தனது தந்தையுடன் வியாபாரத்திலீடுபட்டிருந்தார். 1655 ம் ஆண்டு தந்தையும் மகனும் தமது சொந்தக் கப்பலான ''ஆனில்'' இலண்டனிலிருந்து இந்தியாவிற்கு வந்து வியாபாரம் செய்து இலாபத்துடன் திரும்பினர். இவர்களது விதியை நிர்ணயித்த இரண்டாவது பயணம் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினரின் சேவையில் தமது கப்பலில் வியாபாரத்திலீடுபட்ட போதே நிகழ்ந்தது. சென்னையிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாண்டிச்சேரிக்கு இவர்களது கப்பல் செல்லுகையில் ஏற்பட்ட பெரும் புயலினால் கொட்டியாரக் குடாவை 1659-ம் ஆண்டு நவம்பர் 19-ம் திகதியடைய நேரிட்டது.

இலண்டனுக்கு றொபேட் நொக்ஸ் கைது செய்யப்பட்டதைப் பற்றி அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் கொட்டியாரக் குடாவில் நான்கு மாதங்களாக அங்குள்ள மக்களால் நன்கு உபசரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவரது கப்பலிலிருந்த மாலுமிகள் பலர் உண்ணாட்டிற்குள் சென்று தேவையானவற்றைப் பெற்று வந்ததாக நொக்ஸ் கூறியுள்ளார். ஏற்கனவே கொட்டியாரக் குடாவிற்கு வந்த கப்பலின் மாலுமிகள் கைதாக்கப்பட்டமையை அறிந்தும் 'ஆன்' கப்பலின் மாலுமிகளை இவ்விதம் நடமாட விட்டமை விந்தையாகயுள்ளது. '' ஆன் '' கப்பற்றலைவனுக்கு ஏற்கனவே கைதாக்கப்பட்ட மாலுமிகளைப் பற்றி விசாரணை செய்யும்படி விடுக்கப்பட்ட கட்டளையே இவ்விதம் செயற்பட்டமைக்குரிய காரணமாயிருக்கலாம், ஆனால் றொபெட் நொக்ஸ் தனது நூலில் இவ்விதகட்டளை விடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடவில்லை.

ஆங்கிலேயக் கப்பலொன்று கொட்டியாரக் குடாவில் தங்கியிருப்பதையறிந்த இரண்டாம் இராசசிங்கன் திசாவை யொருவனை அனுப்பி கப்பலில் வந்தவர்களின் நோக்கம், எவ்வளவு காலம் தங்கியிருக்கப் போகின்றார்கள் என்பனவற்றை அறிந்து முடியுமானவரை கைதிகளாகவும் பலரைக் கொண்டு வரும்படி பணித்திருந்தான். இராசசிங்கனின் ஆட்சிமுடிவில் கிட்டத்தட்ட 500 ஐரோப்பிய கைதிகள் கண்டியில் இருந்தனரெனக் கூறப்படுகின்றன. இவ்விதம் இராசசிங்கன் கைதிகளை கண்டியிராச்சி[illegible] வைத்திருந்தமைக்கு றொபேட் நொக்ஸ் [illegible] செருக்குக் காரணமல்லவென்று [illegible] யைப் பெற வேண்டுமென்ற இலட்சிய நோ[illegible] தனது நூலில் கூறியுள்ளார். ஆனா[illegible] நொக்ஸ் பின்னர் கூறியபடி இராசசிங்கனால் [illegible] தமது வருகையை அரசனுக்குக் கடித[illegible] அறிவித்து வெகுமதிகள் அனுப்பாமையே காரணமாயிருக்கலாம்.



இராசசிங்கனால் அனுப்பி வைக்கப்பட்ட திசாவையின் தந்திரத்தால் றொபேட் நொக்ஸ் உட்பட பதினாறு மாலுமிகள் கைதாக்கப்பட்டாலும் கப்பற்றலைவனுக்குக் கடிதத்துடன் சென்ற இருவர் பின்னர் திரும்பி வரவில்லை. பதினாறு கைதிகளும் உண்ணாட்டிற்குள் கொண்டு செல்லப்பட்டுத் தனித்தனியே ஒவ்வொரு கிராமங்களிலும் விட்டு வைக்கப்பட்டனர்.

கொட்டியாரத்திலிருந்து கண்டிக்குக் கைதிகளாகக் கொண்டுவரப்பட்டபின் நொக்ஸையும் அவரது தந்தையையும் பண்டார கொஸ்வத்த என்ற வாரியப் பொலவிலுள்ள கிராமம் ஒன்றில் விட்டனர். இங்கு நொக்ஸினது தந்தை மலேரியா நோய்வாய்ப்பட்டு 1661 பெப்ரவரியில் இறந்தார். றொபேட் நொக்ஸ் தன்னந்தனியனாகவே வாழ்ந்து வந்தார். 1664-ம் ஆண்டு இரண்டாம் இராசசிங்கன் சென்னை ஆள்பதியின் வேண்டுகோளின்படி கைதிகளை விடுதலை செய்ய எண்ணித் தலைநகருக்கு வரவழைப்பித்தான். ஆனால் கண்டியில் திடீரென ஏற்பட்ட கிளர்ச்சியினைத் தொடர்ந்து திரும்பவும் கைதிகளை வேறு புதிய கிராமங்களுக்கு அனுப்பிவைத்தான். நொக்ஸ் கேகாலைக்குத் தென் கிழக்கேயுள்ள கிராமம் ஒன்றில் 1664-ம் ஆண்டு தொடக்கம் 1666-ம் ஆண்டு வரை காலம் கழித்தார். பின்னர் கம்பளையிலிருந்து ஐந்து மைல் தொலையிலுள்ள லெகுந்தெனியா என்ற கிராமத்தில் வாழ்ந்தார். 1669-ம் ஆண்டு கண்டிக்கு வடக்கே பத்துமைல் தொலையிலுள்ள எலடெற்ற என்ற இடத்தில் நிலத்துண்டொன்றினை விலைக்கு வாங்கி வீடொன்றினை அமைத்து வாழ்ந்தார்.

றொபேட் நொக்ஸ் கப்பற்றலைவன் மகனென்றிராமல் கடின உழைப்பாலும் உள்ளூர் வியாபாரத்தாலும் அதிக பணத்தைச் சேகரித்தார். தன்னைப் போன்று பிரமச்சாரிகளாக விருந்த வேறு மூன்று ஐரோப்பிய கைதிகளையும் அழைத்து எலடெற்றவில் வாழ்ந்து வந்தார். கிறிஸ்மஸ், நத்தார் தினங்களில் ஆங்கிலேயரையும் அவர்களது குடும்பத்தினரையும் அழைத்து விருந்துபசாரங்கள் மேற்கொண்டார்.

www.tamilarangam.net



இலூசியா என்ற மூன்று வயதுப் பெண் குழந்தையைத் தினது வளர்ப்புக் குழந்தையாக்கிக் கொண்டார். கண்டி யிராச்சியத்திலிருந்து தப்பியோடும்போது எலடெற்றவி லுள்ள செழிப்புள்ள தோட்டத்தினையும் வீட்டையும் இக் குழந்தையின் பெயரில் உயில் எழுதி விட்டுச் சென்றார்.

நொக்ஸ் கண்டிய வாழ்க்கை முறையினை நன்கு பழகி யிருந்தாலும், நாட்டைவிட்டுத் தப்பியோட வேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தில் நிலைத்திருந்தது. நொக்ஸ் கண்டி யிலிருந்து கொண்டே தன்னை மீட்கும்படி உதவிகோரிச் சென்னை ஆள்பதிக்கு ஒல்லாந்தரது கம்பெனிக்கூடாகக் கடிதம் அனுப்பியிருந்தார். ஒல்லாந்த ஆள்பதியாகவிருந்த வான் கோயன்ஸ் கைதிகளில் இரக்கம் கொண்டு சிறு தொகைப்பணமும் கடிதமும் கள்ளத்தனமாக அனுப்பிய தாகத் தெரிகின்றது. ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கு மிடையில் நிலவிய வர்த்தக ஏகபோக உரிமைப் போட்டியே ஆங்கிலேயக் கைதிகளை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதில் தாமதத்தினை ஏற்படுத்தியது.

நொக்ஸ் உண்ணூட்டில் வியாபாரம் செய்வது போன்று அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு தப்பியோடுவதற் குரிய பாதைகளை, இடங்களை அறிவதில் கவனம் செலுத்தி ஞர். 1679-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18-ம் திகதி நொக்ஸ் தனது திட்டங்கள் பூர்த்தியானதும் அநுராத புரத்திற் கூடாக மல்வத்துஓயாக் கரையோரமாக அரிப்பி லுள்ள ஒல்லாந்தரது கோட்டையை யேடைந்தார். நொக்ஸ் கண்டியில் பத்தொன்பது வருடங்கள் ஆறுமாதங்கள் பதி னேழு நாட்கள் கைதியாகக் கழித்திருந்தார். அரிப்பி லிருந்து மன்னருக்கு ஒல்லாந்தரினால் அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து கொழும்பு சென்று பற்றேவியாவை யடைந்தார். பற்றேவியாவிலுள்ள மகாதேசாதிபதிக்குக் கண்டியிராச்சியத்தின் நிலைமைகளை விளக்கினார் எனப்படு கின்றது. பின்னர் இங்கிலாந்திற்குச் சென்று தொடர்ந்து கப்பற்றலைவனாகப் பதவி வகித்தார்.

இவரது நூல் வெளியிடப்பட்டபோது இரண்டாம் சாள்ஸ் மன்னன் அதனை வாசித்துவிட்டு இவரை நேரில்



அழைத்துப் புகழ்ந்தான் எனக் கூறப்படுகின்றது. நொக்ஸ் தனது சுய சரித்திரத்தில் இந்நூலை எழுதிப் பிரசுரிக்க வேண்டுமென்ற எண்ணம் ஆரம்பத்தில் தனக்கு இருக்க வில்லையெனக் கூறியுள்ளார். பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் இயக்குனர்களில் ஒருவரின் தூண்டுத லினாலேயே இதனைப் பிரசுரித்ததாகக் கூறியுள்ளார்.

இந்நூல் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் மூன்று பகுதிகளும் நாட்டினை அரசனை, அரச சபையை சமூக அமைப்பை விபரித்துச் செல்கின்றது. நொக் ஸினது தனிப்பட்ட வரலாறு கைதியாகியமை தொடக்கம் தப்பியோடியது வரை நான்காவது பகுதியில் கூறப்பட் டுள்ளது. முதல் மூன்று பகுதிகளிலும் நாட்டின் புவியியல், இயற்கையமைப்பு, விவசாயம் இரண்டாம் இராசசிங்கனின் ஆட்சி, நிர்வாகம், சமூக அமைப்பு, சட்ட அமைப்பு ஆகி யன நன்கு விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் முதலில் பிர சுரிக்கப்பட்டபோது "கண்டியிராச்சியத்திலிருந்து நொக்ஸ் தனது முதுகிலோ பணப்பையிலோ ஒன்றையும் கொண்டு வராவிட்டாலும் கண்டியிராச்சியம் முழுவதையும் தனது தலையில் சுமந்து வந்து விட்டார்" எனப் புகழப்பட்டார்.

நொக்ஸ் பியூறிற்றன் மதத்தவராக விளங்கியதால் இங்கிலாந்தில் இவர் காலத்தில் காணப்பட்ட சமயத் தகராறுகளிலிருந்து விடப்பட்டவராக விளங்கினார். பைபிளிலேயே நம்பிக்கை கொண்டு மற்றைய மதத்த வர்கள் கொண்டிருந்த துவேச மனப்பான்மைகளற்றுக் காணப்பட்டார். தனது சொந்தச் சமய நம்பிக்கைகள் அவரது நூலில் அடிக்கடி எடுத்தாளப்பட்டாலும் இவரது நூலில் காணப்படும் மதிப்பீடுகளில் அவை பாதிப்பை ஏற் படுத்தவில்லை. கைத்தொழிற் புரட்சிக்கு முந்திய இங்கி லாந்து சமூகத்தைச் சார்ந்தவராக அவர் விளங்கியமையால் கண்டிய சமூகத்தை நன்கு விளங்கிக் கொள்ளக்கூடியவராக விருந்தார்.

கண்டி இராச்சியத்தில் இருபது வருடங்கள் வரை வாழ்ந் மையால் கண்டியிராச்சியத்தினை நன்கு அறியக் கூடிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாய்ப்பினைப் பெற்றிருந்தார். கிராமப் புறங்களிலும் தலைநகருக்கண்மையிலும் வாழ்ந்துள்ளார். குறிப்பிட்டளவு பிரதேசத்தில் அவர் சுதந்திரமாக நடமாடக் கூடியதாகவிருந்தது. கண்டியில் வாழ்ந்த இறுதியாண்டுகளில் சிங்களக் கிராமத்தவனுகவே மாறியிருந்துள்ளார். 1673-ம் ஆண்டு முதல் 1679-ம் ஆண்டுவரை உள்ளூர் வர்த்தகராக மாறிப் பலபகுதிகளை நேரடியாகக் கண்டறியும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். தப்பியோடியபின் இவரால் தயாரிக்கப்பட்ட படம் கண்டியிராச்சியத்தினைப் பற்றிய இவரது அறிவை நன்கு விளக்குகின்றது. சில வருடங்களுக்குள்ளேயே சிங்கள மொழியையும் நன்கு அறிந்திருந்தார். ஆகவே கண்டியிராச்சியத்தில் கைதியாகவிருந்த காலம் இவருக்கு அவ்விராச்சியத்தினை அறிவதற்குரிய வாய்ப்பை நன்கு ஏற்படுத்தியது.

இந் நூலை நொக்ஸ் எழுதவேண்டியதன் நோக்கம் தனது மனத்திருப்திக்காகவும் நிம்மதிக்காகவுமேயெனத் தனது சுயசரிதத்தில் வெளிப்படையாகவே கூறியுள்ளார். இந்நூலைப் பிரசுரிக்கவோ விற்பனை செய்யவோ அவர் எண்ணியிருக்கவில்லை. கண்டியில் தனது செயல்களுக்கு வேறு யாருக்காவது நியாயம் கூறவேண்டிய நிலையில் இருக்கவில்லை. தான் கண்டவற்றைத் திரித்தோ அல்லது உண்மைகளை மறைத்தோ எழுதவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு இருக்கவில்லை. ஆதலினுல் நொக்ஸினது நூலில் கூறப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனக் கூறலாம்.

கண்டிப் பிரதேசத்தில் தான் கண்ட அனுபவங்களை விபரிக்கும்போது தனது அபிப்பிராயங்களைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவே கூறியுள்ளார். சிங்களவர்கள் சோம்பல் மிகுந்தவர்கள் உழைப்பாளிகளல்லவென்று கூறியுள்ளார். அவரது தந்தையிறந்தபோது அடக்கம் செய்வதற்கு ஒருவரும் உதவ முன்வராமையையிட்டு மனம் நொந்து எழுதியுள்ளார். இரண்டாம் இராசசிங்கனின் எதேச்சதிகார ஆட்சியினையும் மானிய முறையிலான சேவை முறையையும் இவர் கண்டித்துள்ளார்.

நொக்ஸினது அனுபவங்கள் பல காரணிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன வென்றும் கூறலாம். இலங்கையில்



வாழ்ந்த பத்தொன்பது வருடங்களும் நி
ணிப்பதில் முழுமையாகக் காலங் கழித்தா
யாது. ஆரம்பத்தில் 1660-ம் ஆண்டு ஏப்ர
கப்பட்டதைத் தொடர்ந்து நோய்வாய்ப்ப
யைக் கவனிப்பதிலும் புதிய சூழ்நிலையில்
யிலுமே வாழ்ந்துள்ளார். தந்தையிறந்த
பதினுறு மாதங்களாகத் தொடர்ந்து
பட்டிருந்தமையினுல் வெளியனுபவங்களை
முடியாது.

மொழிக் கஷ்டத்தினுலும் நொக்ஸின
தடைபட்டிருந்தனவென்று கூறலாம்.
யினைக் கற்பதிலும் சிங்களவர்களுடன் தெ
திலும் படிப்படியாகவே முன்னேற்றம்
தனது நூலிலேயே பல வருடங்களாகச்
யைப் பேசவோ அல்லது விளங்கவோ மு
இருந்துள்ளதாகக் கூறியுள்ளார். கைநாகி
களுக்குப் பின்னரும் ஓரளவிற்குமட்டுமே சி
பேசக்கூடியதாகவிருந்தது என்று எழுதி
மொழியினை கைதியாகவிருந்த இறுதி ஆ
அறிந்திருந்தாலும் ஆரம்பத்தில் சூழ்நிலைக
தடையாகவேயிருந்தது எனக் கூறல் வே

நொக்ஸினது அனுபவங்கள் இவருக்கு
ருந்த கட்டுப்பாடுகளினுலும் தடைப்பட்
கொஸ்வத்த என்ற இடத்தில் கைதியாக ஒ
கள் வாழ்ந்தபோது இவரது நடமாட்டங்கள்
பாட்டிற்குள் அமைந்திருந்தன. 1669-ம்
கம் 1679-ம் ஆண்டு வரையுமே அதிக
எல்லாப் பகுதிகளுக்கும் போய்வர முடிந்தது
பது வருட காலத்திற்கூட கண்டியன் மேற்
பகுதிகளைப் பற்றியே நன்கு அறிந்திருந்
முடியும்.

பலதரப்பட்ட மக்களுடனும் நொக்
கொண்டு வாழ்ந்தார் எனக் கூறமுடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இய தொடர்புகள் ஓரளவு கல்வியறிவுள்ள மக்களுடன்
இருந்ததாகக் கூறமுடியாதிருக்கின்றது. விஜயனது வம்சத்
தைப்பற்றிப் போர்த்துக்கீசன் ஒருவன் இவரிடம் கூறிய கருத்
திற்கு விளக்கங் கூறக் கூடியதாக ஒரு சிங்களவரையும் தான்
காணவில்லையெனக் கூறியுள்ளார். இவர் தொடர்பு கொண்ட
மக்கள் பொருளாதார கலாசார நிலைகளில் பின் தங்கிய
வர்களாயிருந்திருக்க வேண்டும். கண்டியிராச்சியத்தில் சாதி
குறைந்தவர்களுடனேயே இவர் அதிகம் தொடர்பு கொண்
டிருந்தார் எனக் கூறலாம். ஆங்கிலேயக் கைதிகள் அரச
னுக்குச் சொந்தமான நிலங்களிலும் கடடங்களிலுமே
வாழ்ந்து வந்தனர். இவர்களை உபசரித்தவர்கள் பெரும்
பாலும் அரசனது மந்தைகளைப் பராமரிப்பவர்களாகவும்
பல்லக்குச் சுமப்பவர்களாகவுமே யிருந்துள்ளனர். உதாரண
மாக நொக்ஸ் வாழ்ந்த லெகுந்தெனியா என்ற இடத்தில்
பயங்கரக் குற்றவாளிகளே விடப்பட்டிருந்தனர். எலடெற்ற
என்ற கிராமத்தில் வாழ்ந்தபோது கள்வர்கள் அதிகம்
என நொக்ஸ் கூறியுள்ளார். அத்துடன் வறுமை மிகுந்த
வர்களாகக் காணப்பட்டனர் எனப் பல சந்தர்ப்பங்களில்
நொக்ஸ் குறிப்பிடுகின்றார். ஆகவே உயர்ந்த சாதியினை
யுடைய, சமூக பொருளாதார நிலையில் மேம்பட்ட மக்க
ளுடன் அதிகளவு தொடர்பு கொண்டிருந்தாரெனக் கூற
முடியாதிருக்கின்றது.

கண்டிய மன்னனும் மக்களாலும் கிறிஸ்தவ மதத்
தினர்களும் ஐரோப்பியர்களும் நன்கு கௌரவிக்கப்பட்டன
ரென்றும், சுதேசிகளை விடக் கூடிய உரிமைகளை அனுப
வித்தனரென்றும் குறிப்பிட்டுள்ளார். யுத்தத்திறமைகளின்
அடிப்படையில் ஐரோப்பியர்கள் சுதேசிகளை விட திறமை
யானவர்களென இரண்டாம் இராசசிங்கன் கருதியிருக்க
லாம். ஆனல் விசுவாசம் மிக்க ஐரோப்பியர்களுக்கு மட்
டுமே இராசசிங்கன் உயர் பதவிகளை அளித்திருந்தானென்
பதும் குறிப்பிடத்தக்கதாகும். கண்டிப் பிரதேசத்திலிருந்த
கிட்டத்தட்ட முப்பது ஆங்கிலேயக் கைதிகளில் மூன்று
பேருக்கு மட்டுமே உயர் பதவிகள் அளிக்கப்பட்டிருந்தன.
இராசசிங்கனின் அதிகாரராக விளங்கியவர்களில் ஒருவன்



தென்னிந்திய வம்சத்தவனுயிருந்துள்ளான். ஐரோப்பியர்
களுக்கு மட்டும் கூடிய அந்தஸ்து அளிக்கப்பட்டது எனக்
கருதுவது பொருந்துவதாகவில்லை யெனலாம்.

சமூகத்திற்கூட வெள்ளையர்களை மக்கள் அவ்வளவு மதிக்க
வில்லையெனத் தெரிகின்றது. சாதி குறைந்த மக்கள் கூட
நொக்ஸையும் அவரது சக கைதிகளையும் தமது தண்ணீ
ருள்ள மண் பாத்திரங்களில் தொட அனுமதிப்பில்லையென
நொக்ஸ் தனது நூலில் கூறியுள்ளார். கைதிகளின் தேவை
களைக் கவனிக்கவும் கண்காணிக்கவும் விடப்பட்டவர்களுக்
குப் படுக்கப் பாய்களோ அன்றேல் உடுப்பதற்குத் [1]துணி
களோ கொடுக்கப்படவில்லை. இவற்றிலிருந்து நொக்ஸ் எத்த
கைய சூழ்நிலையில் எவ்வித சுதேசிகள் மத்தியில் வாழ்ந்
தார் என்பது தெளிவாகின்றது.

இரண்டாம் இராசசிங்கனை நொக்ஸ் வர்ணிக்கும்போது
தானே நேரில் அரசனைக் கண்டது போல் எழுதியுள்ளார்.
ஆனல் பற்றேவியாவிலுள்ள ஒல்லாந்த அதிகாரிகளின் முன்
சாட்சியமளித்தபோது கைதியாகவிருந்த காலம் முழுவதி
லும் இரு முறைகளுக்கு மேலாக அரசனைக் காணவில்லை
யெனவும், அரசனின் உடைத்தோற்றத்தினை அவதானிக்க
முடியாதளவு தூரத்திலேயே நின்று பார்த்ததாகவும் குறிப்
பிட்டுள்ளார். நொக்ஸ் தனது நூலில் இரண்டாம் இராச
சிங்கன் தனது மகனையே நஞ்சூட்டிக் கொலை செய்ததாகக்
குறிப்பிட்டுள்ளார். ஆனல் 1687-ல் இராசசிங்கன் இறந்த
போது அவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் பதவி
யேற்றான். நொக்ஸ் இவ்விதம் குறிப்பிட்டமைக்கு இரண்
டாம் இராசசிங்கன் தனக்கெதிராக ஏற்பட்ட கலகத்தினைத்
தொடர்ந்து பரப்பிய வதந்தியே காரணமாயிருந்தது.
கலகக்காரர்கள் இவனது மகனைப் பதவியிலிருத்த விரும்பிய
தனலேயே அதற்கெதிரான வதந்தியை இராசசிங்கன் பரப்
பியிருந்தான். இளவரசனை இரகசியமான இடத்தில் பாது
காப்பாக வளர்த்ததுடன் கலகக்காரர்களின் தலைவர்களில்
நால்வரைச் சிரச்சேதம் செய்து ஒருவனை ஒல்லாந்தரிடமே
தண்டனை வழங்கும்படி அனுப்பியிருந்தான். இதன் மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கண்டி மக்களை ஒல்லாந்தர் தமது நண்பர்களெனவும் வேண்டிய தருணத்தில் தனக்கு உதவிக்கு வருவார்களெனவும் நம்பச் செய்தான். கொழும்பிலுள்ள ஒல்லாந்தர் கூட பல வருடங்களாக இராசசிங்கனுக்குப்பின் வாரிசு இல்லையென்றே நம்பித் தமது கொள்கையையும் அதன் அடிப்படையில் மாற்றியமைத்தனர்.

நொக்ஸ் கலகம்பற்றி புதிய கருத்துத் தெரிவித்தமைக்கு இங்கிலாந்தில் நடைபெற்ற உள்நாட்டுயுத்த அடிப்படையில் அவர் சிந்தித்ததே காரணமாயிருக்க வேண்டும். ஸ்ருவார்ட் மன்னர்களின் எதேச்சாதிகாரத்தினை இவர் நன்கு அறிந்திருந்ததால் இராசசிங்கனின் ஆட்சியை எதேச்சாதிகாரம் மிக்கதெனவும், கொடூரமானதெனவும், கலகத்தை மக்கள் கலகம் எனவும் வர்ணிக்கச் செய்தது. எனினும் 1696-ல் நொக்ஸ் எழுதிய தனது சுயசரிதைக் குறிப்புகளில் தனது தவறைத் திருத்தி எழுதியுள்ளார்.

பதினேழாம் நூற்றாண்டின் பொருளாதார நிலைமைகளை அறிவதற்கு நொக்ஸினது நூல் எந்தளவிற்கு உதவியாக உள்ளது என்பதும் சந்தேகமாகவுள்ளது. நொக்ஸ் கண்டியில் கைதியாயிருந்த காலம் முழுவதும் ஒல்லாந்தர் கண்டி மீது பொருளாதார முற்றுகையை வெற்றிகரமாக ஏற்படுத்தியிருந்தார்கள். கண்டிய மன்னனின் அந்நிய வியாபாரத் தொடர்புகள் தடைபட்டிருந்தன. கரையோரப் பிரதேசங்களுடன் நடைபெற்ற வியாபாரங்கூடப் பல சந்தர்ப்பங்களில் தடைபட்டிருந்தது. கண்டியில் பொருளாதார மந்தநிலை காணப்பட்ட காலத்திலேயே நொக்ஸ் கண்டியில் வாழ்ந்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

நொக்ஸினது நூலின் முக்கியத்துவம் பிரித்தானிய நூதனசாலையில் அவரது கையெழுத்துப் பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டமையால் அதிகமாயுள்ளன. இவரது நண்பர்களின் தூண்டுதலினால் தனது முதல் நூலை மேலும் விரிவுபடுத்தி எழுதும் நோக்கத்துடன் இவற்றை எழுதினார் என்று கூறப்படுகின்றது. ஆங்கிலேயரான நொக்ஸ் ஒல்லாந்தருக்கும் கண்டியருக்கு மிடையே நடைபெற்ற போராட்டத்தை நோக்குவது ஒருபக்கச் சார்பாக அமையாது, அக்காலப் பகுதிக்குரிய நடுநிலைமைக் குரலாக அமைகின்றதெனலாம்.

# றொபேட் நொக்ஸின் நூலிலிருந்து . . . .

## இரண்டாம் இராசசிங்கன்; ஆட்சிமுறை; வாழ்க்கைமுறை:

இராசசிங்கன் என்ற பெயர் சிங்க அரசன் எனப் பொருள் படும்; இவன் முறையான வம்சவாரிசு அல்லது இரத்த உரிமையுடையவனல்லன்.

x x x x

உயரமான தோற்றம் உடையவனல்லன். கறுப்பு நிறத்தவன், எந்த நேரமும் கண்களை அங்குமிங்கும் நோட்டம் விட்டபடியிருப்பான். பெருத்த வயிற்றினை யுடையவன்.

x x x x

இவனது வயது எழுபதிற்கும் எண்பதிற்கும் இடைப்பட்டதாகவிருந்தாலும் செயலிலும் முகத் தோற்றத்திலும் அவ்விதம் தோன்றவில்லை.

x x x x

இவனது அரண்மனை இரவுபகலாகப் பலத்த காவலுக்குட்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிவினரதும் காவல் முறை முடிவடைந்ததும் தாரை, பறையடித்து அரசனுக்கு மரியாதை செலுத்துவதுடன் மக்களையும் விழிப்பாகவிருக்கச் செய்வர்.

x x x x

வேலையாட்களில் பெரும்பாலானவர்கள் இளம் வயதினர்களாகவும், பையன்களாகவும் இருப்பர். திசாவைகள் மூலம் நல்ல வாட்டசாட்டமான உயர்ந்த வம்சத்திலுள்ள பையன்களைத் தெரிவு செய்வான்.

x x x x

அரண்மனையில் சமையல் செய்வதற்கு இளம்வயதினரான திருமணமான, திருமணமாகாத பெண்களையே தெரிவு செய்வர். அவர்கள் பின்னர் திரும்ப அனுப்பப்படுவதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



''அரசனுக்கு உண்பதற்காகக் கொண்டுவரப்படும் உணவுகள் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருக்கும். அவற்றினைப் பரிமாறுபவர்களின் வாய் துணியினால் கட்டப்பட்டிருக்கும்''

x x x x

அரசனைக் காண வருபவர்கள் அரசனின் முன் நிலத்தில் வீழ்ந்து பல முறை வணங்கிப் பின் மண்டியிட்டு உட்கார்ந்திருப்பார்கள். கிறிஸ்தவர்கள் தொப்பிகளைக் கழற்றி முழங்காலில் நிற்கும்படி பணிக்கப்படுவார்கள்.

x x x x

தூதுவர்கள் பகட்டானமுறையில் அரசமரியாதைகளுடன் வரவேற்கப்படுவர். அவர்களுக்கான செலவுகள் யாவும் அரசனினாலேயே மேற் கொள்ளப்படும். தூதுவர்கள் கொண்டு வருகின்ற வெகுமதிகளை அரசன் தனது ஆட்களைக் கொண்டு தூக்கிவரச் செய்வான். தூதுவர்களுடன் மற்றவர்கள் கதைக்கவும் அனுமதிப்பதில்லை.

x x x x

கொடூரமான தண்டனைகள் அரசனால் வழங்கப்படும். தண்டனை வழங்கப்படும் இடத்தில் சிலர் கம்பங்களில் கொல்லப்பட்டிருப்பர்; மரங்களில் தொங்க விடப்பட்டிருப்பர்; யானையால் கொல்லப்பட்டிருப்பர்.

x x x x

கைதிகள் பொதுச் சிறைச்சாலைகளில் வைக்கப்படுவர். சிலர் பிரபல்யமானவர்களின் பாதுகாப்பில் விடப்படுவர். அரண்மனையைச் சுற்றியுள்ள வீதிகளைச் சுத்தம் செய்வதற்கு கைதிகள் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கொண்டுவரப்படுவர்.

x x Z z

இவனது ஆட்சி கொடூரமானதும் தன்னிச்சையானதுமாகும். தனது விருப்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் ஏற்ப ஆட்சிபுரிந்தான். தானே தனக்கு ஆலோசகனாக விளங்கினான்.

x x x x

தனது கொடூரமான ஆட்சிக்கெதிரான சதியாலோசனைகளையும் சதித்திட்டங்களையும் விழிப்புடன் அடக்கி வந்தான். இரவில் முரசுகளினதும் பறைகளினதும் சத்தம் இவனையும் மக்களையும் விழிப்பாகவிருக்கச் செய்யும்.



இரவிலேயே முக்கியமான கருமங்களை மேற்கொள்வான்; தூதுவர்களைச் சந்தித்தல்; கடிதங்கள் வாசித்தல், நியமனங்கள் வேலையுயர்வுகள் மேற்கொள்ளுதல், தண்டனைகள் வழங்குதல் போன்ற முக்கிய கருமங்கள் மேற்கொள்ளப்படும்.

x x x x

கிறிஸ்தவ சமயத்தினரை அரசன் கௌரவித்தான், இவனது சகோதரி யிறந்தபோது நாடு முழுவதும் சோகத்திலிருக்க கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திலீடுபட்ட ஒல்லாந்தரைத் தண்டிக்கவில்லை.

x x x x

புதுவருடத்தினை யொட்டிய கொண்டாட்டத்தின் போது பிரதானிகள் பிரபல்யமானவர்கள், புதுவருட வெகுமதிகளையும் வரிகளையும் அரசனுக்கு அளிப்பார்கள்.

x x x x

அதிகார்கள், திசாவைகள் குற்றம் செய்தவர்களை விசாரித்துத் தண்டனைகள் வழங்கினாலும், மரண தண்டனை அரசனாலேயே வழங்கப்படும்.

x x x x

யுத்தங்களுக்காக அல்லது வேறு கருமங்களுக்காகப் படைகளை அனுப்பும் போது அரசன் தூதுவர்கள் மூலம் கட்டளைகளைக் கூறி விடுவான். சில சமயங்களில் நேரே அழைத்துக் கட்டளைகளைப் பிறப்பிப்பான். எழுத்துமூலம் ஒருவித கட்டளைகளும் விடுக்கப்படுவதில்லை.

x x v x

போர் வீரர்களும் தளபதியும் சிலசமயங்களில் எந்த கோக்கத்திற்காகச் செல்கிறோம் என்பது தெரியாமலே படையெடுப்பார்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கியிருக்கும்படி கூறிவிட்டுப் பின்னர் அரசன் கட்டளைகளை அனுப்புவான்.

x x x x

பிரதம தளபதியாக ஒருவரும் நியமிக்கப்படுவதில்லை. போர்வீரர்கள் வெவ்வேறு பிரிவுகளாகத் தலைவர்களின் கீழ் செல்வர். இவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இணைந்து செயற்பட்டால் தனக் கெதிராகச் சதிசெய்வர் என்ற பயம் அரசனிடமிருந்தது.

x x x x

சிங்களவர்களை எங்கிருந்து வந்தவர்கள் எனக் கேட்ட போது அவர்களால் கூறமுடியவில்லை. தமது நாட்டில் பேய்களே முதலில் குடியேறியதாகக் கட்டுக்கதைகளையே கூறினர்.

x x x x

மலைநாட்டிலும் தாழ்நாட்டிலும் வாழும் சிங்களவர்களின் இயல்புகள் மாறுபட்டவை. தாழ்நாட்டிலுள்ளவர்கள், இரக்கமுள்ளவர்கள், நேர்மையானவர்கள், உதவி செய்பவர்கள், அன்னியர்களை ஆதரிப்பவர்கள், ஆனால் மலைநாட்டிலுள்ளவர்கள் இதற்கு நேர்மாறானவர்கள்.

x x x x

சிங்களவர்கள் செயலிலும் நடத்தையிலும் போத்துக்கீசரைப் போன்றவர்கள். அவர்களின் எண்ணங்கள் தந்திரமானவை. வஞ்சகமுடையவை. பேச்சில் மரியாதையும் முகத்துதியும் நிறைந்திருக்கும்.

x x x x

திருமணம் செய்யும்போது குறைந்த சாதியினரைத் திருமணம் செய்யமாட்டார்கள். குலப் பெருமையை நோக்குவார்களே தவிர செல்வத்திற்கு முக்கியம் கொடுப்பதில்லை.

x x x x

கணவன் உண்ணும் போது மனைவியே பரிமாறுவாள்; மனைவி கணவனுடன் சேர்ந்து உண்பதில்லை. கணவன் உண்ட பாத்திரத்தில் எஞ்சியதையே மனைவி உண்பாள்; சாப்பிடும்போது அதிகமாகக் கதைப்பதில்லை.

x x x x

திருமணங்கள் பெற்றோர்களினாலேயே நிச்சயிக்கப்பட்டன. பெண்களும் ஆண்களும் பொதுவாக மூன்று நான்குதரம் திருமணம் செய்வார்கள்.

x x x x



கணவனும் மனைவியும் பிரியும்போது பிள்ளைகளிருந்தால் ஆண் குழந்தைகளைக் கணவனும், பெண் குழந்தைகளை மனைவியும் பொறுப்பேற்கவேண்டுமெனப் பொதுக் சட்டம் விதித்தது.

x x x x

இரவில் அதிகம் நித்திரை கொள்வதில்லை. இரவில் பல தடவைகள் எழும்பி வெற்றிலை உண்பார்கள். புகையிலை புகைப்பார்கள். பின்னர் நித்திரையாகுமட்டும் பாடல்கள் பாடுவார்கள்.

x x x x

இறந்தவர்களுக்காகப் பெண்கள் புலம்பும் போது தலைமயிரைக் குலைத்துக் கீழே தொங்கவிட்டு இரண்டு கைகளையும் தலைக்குப் பின்னால் வைத்துக் கொண்டு பயங்கரமான சத்தத்துடன் இறந்தவர்களின் பெருமைகளைக் கூறி அழுவார்கள்,

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கைத் தீவின் உண்மையான, நிச்சயமான வருணனை.

— பிலிப்பு பால்தேயு —

இலங்கை வரலாற்றில் வடபகுதியிலுள்ள மக்களைப் பற்றி ஐரோப்பியர் ஒருவரால் எழுதப்பட்ட முதலாவது நூலாக வண. பிலிப்பு பால்தேயுவின் ''இலங்கைத்தீவின் உண்மையான நிச்சயமானவருணனை'' என்ற நூல் விளங்குகின்றது. இலங்கையில் புரட்டஸ்தாந்து சமய வரலாற்றில் பால்தேயுவின் பெயர் முக்கியம் பெறுகின்றது. இவர் இத்தீவின் வடபாகத்தில் தொடர்ந்து எட்டு வருடங்களாக மதப்பிரசங்கியாக வாழ்ந்தவராவர். மக்களுடன் நன்கு பழகித் தமிழ் மொழியையும் கற்றிருந்தமையினால் இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறையினை நன்கு அவதானிக்க முடிந்தது. பால்தேயு தனது நூலில் இலங்கையைமட்டும் எடுத்தாளாமல் தென்னிந்தியாவையும் அங்குள்ள இந்துக்களின் சமய நம்பிக்கைகளையும் வர்ணித்துள்ளார்.

பால்தேயு ஒல்லாந்து நாட்டில் 1632-ம் ஆண்டு பிறந்தார். இவர் நான்கு வயதிலேயே பெற்றோர்களை இழந்தமையினால் இனத்தவர்களாலேயே வளர்க்கப்பட்டார். 1654-ம் ஆண்டு தனது 21 வயதில் வேத சாஸ்திரப் படிப்பை முடித்து ஒல்லாந்த திருச்சபையின் பிரசங்கியாக நியமிக்கப்பட்டார். கிழக்கத்திய நாடுகளுக்குப் பயணமாகுமுன் 1654-ம் ஆண்டு திருமணம் செய்தார். ஆனால் அடுத்த ஆண்டிலேயே தனது மனைவியையும் இழந்தார். 1656-ம் ஆண்டு மேமாதம் கொழும்பு ஒல்லாந்தர் வசம் சரணடைந்த செய்தி அறிந்தவுடன் பால்தேயு இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இவர் இலங்கைக்கு வந்த சமயம் ஒல்லாந்தர் போத்துக்கீசரை விரட்டுவதில் ஈடுபட்டிருந்தனர். இவர் காலியிலேயே முதலில் ஒருவருட காலம் தங்கியிருந்தார். போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் நீக்குவதற்குரிய இறுதிப்படையெடுப்பிற்குரிய ஆயத்தங்களில் ஒல்லாந்தர் ஈடுபட்டிருந்தமையால் சமய வேலைகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

தென்னிந்தியாவிலும் இலங்கையின் வடபாகத்திலும் போர்த்துக்கீசருக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்பில் பால்தேயு துருப்புக்களுக்கு மதபோதனை செய்வதற்காக தனிக்குருவாக அவர்களுடன் அனுப்பப்பட்டார். படையெடுப்பு வெற்றிகரமாக முடிவெய்தியதும் பால்தேயு யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் அதனைச் சூழவுள்ள தீவுகளுக்கும் பிரசங்கியாக நியமனம் பெற்றார். இவரிடம் இப்பகுதியிலுள்ள இந்துக்களையும் கத்தோலிக்கர்களையும் மதம் மாற்றிப் புரட்டஸ்தாந்து சமயத்திற்கு அத்திவாரமிடும் பெரும் பொறுப்பு விடப்பட்டது.

ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய போது நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்ட கத்தோலிக்க சமூகங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு கிராமமும் ஒரு தேவாலயத்தையும், மதபோதனைக்காக ஒரு பாடசாலையையும் கொண்டிருந்தது. வடமாகாணத்தில் பிரான்ஸிஸ் சேவியரின் முயற்சியினால் மற்றைய பகுதிகளை விட கத்தோலிக்க மதம் நன்னிலையிலிருந்தது. அத்துடன் நாற்பது வருடங்களுக்கு மேலாகப் போர்த்துக்கீசரின் ஆதிக்கம் வடபகுதியில் நிலைத்திருந்துள்ளது. 1658-ம் ஆண்டு ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றிய போது இப்பகுதியில் மட்டும் நாற்பது கத்தோலிக்கக் குருமார்கள் மதச்சேவையிலீடுபட்டிருந்தார்கள். இதனால் பால்தேயு கடினமான சூழ்நிலையிலேயே தனது மதப்பிரசார வேலைகளை ஆரம்பிக்க வேண்டியவராகவிருந்தார்.

பால்தேயுவின் மதச் சேவை யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1658-ம் ஆண்டு தொடக்கம் 1665-ம் ஆண்டு வரை நடைபெற்றது. தென்னிந்தியாவிற்குச் சென்ற போர்த்துக்கீசப் படையுடன் சென்றுவிட்டுத் திரும்பியதும் தெல்லிப்பழையில் 1658-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தனது

இ. வ. தொ.—3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாவது பிரசங்கக் கூட்டத்தினை நடாத்தி நாற்பது
கத்தோலிக்கக் குருமார்கள் பிரசார வேலைகளை மேற்கொண்ட
பிரதேசத்தில் தனித்து நின்று செயற்பட வேண்டியவராக
பால்தேயு காணப்பட்டார். எனினும் போர்த்துக்கீசர்
வசமிருந்த எல்லாத் தேவாலயங்களும் பாடசாலைகளும்
ஒல்லாந்தரிடம் கையளிக்கப்பட்டமை இவரின் முயற்சியை
இலகுவாக்கியது. தமிழ் போர்த்துக்கீச மொழிகளைக் கற்ப
தில் பால்தேயு ஆரம்பத்தில் கவனம் செலுத்தினார். ஆசிய
மொழிகளைக் கற்றுச் சமயப்பிரசாரம் செய்ய வேண்டுமென
வழிகாட்டி நின்றவர் பால்தேயு ஆவர். இவரைப் பின்
பற்றி மற்றைய பிரசங்கிகளும் தமிழ் சிங்கள மொழிகளில்
தேர்ச்சி பெற்றனர். பால்தேயு போர்த்துக்கீச மொழியை
அறிந்திருந்தமை ஆரம்பத்தில் பெரிதும் உதவியாக விருந்
தது. யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீச மொழி தெரிந்த
வர்கள் பலர் இருந்தனர். தமிழையும் தமிழ் இலக்கணத்தை
யும் ஓரளவிற்கு அறிந்திருந்தாலும் யாழ்ப்பாணப் பிரதேசம்
முழுவதிலும் தமது மதபோதனைகளை மேற்கொள்ள முடிய
வில்லை. இதனால் இவர் பல நூல்களை எழுதிப் பாடசாலை
ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட சுதேசிகள் மூலம் மதபோதனை
களை மேற்கொள்ளுவித்தார். கர்த்தருடைய ஜெபம், பத்துக்
கற்பனைகள் அப்போஸ்தருடைய விசுவாசப் பிரமாணம்
ஆகிய நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டன.

1658 ம் ஆண்டு தொடக்கம் 1661-ம் ஆண்டு வரை
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேறு ஐரோப்பியர்களின்
உதவியில்லாமல் மதச் சேவையிலீடுபட நேரிட்டது. 1661-ம்
ஆண்டு யோஸ் ஏபெறெயிஸ் என்பவரும் இவருக்கு உதவி
யாக மன்னாரிலிருந்து அனுப்பப்பட்டார். தென்னிந்தியா
வின் மீது மேற்கொண்ட இரண்டாவது படையெடுப்பு
வெற்றி பெற்றதும் பால்தேயுவிற்கு உதவியாளராக யோஸ்
டொன்கர் என்பவரும் அனுப்பப்பட்டார். தென்னிந்தியா
போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தின் கீழ் வந்ததும் பால்தேயு
சமய வேலைகளுக்காக அங்கு செல்லவேண்டியவரானார்.
1660-ம் ஆண்டு யூலை மாதம் நாகபட்டினத்திற்குச் சென்று
சமய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். யாழ்ப்



பாணக் குடாநாட்டில் இம்மூன்று மதப்பிரசங்கிகளும் தனித்
துப் பிரசாரவேலைகளை மேற்கொள்ள நேரிட்டது. பால்
தேயு தனது அறிக்கையில் ஞாயிற்றுக்கிழமைகளில் மூன்று
பிரசங்கங்களும், மற்றைய நாட்களில் ஒரு பிரசங்கமும்
நடாத்தி வந்ததாகவும், அத்துடன் வெளியிடங்களிலுள்ள
தேவாலயங்களுக்கும் சென்றுவர வேண்டியிருந்ததாகவும்
கூறியுள்ளார்.

பால்தேயுவின் மதச் சேவை 1661-ம் ஆண்டு ஒல்லாந்த
ரது படைகளுடன் கொச்சின் முதலான இடங்களுக்குச்
சென்றதால் தடைபட்டது. பின்னர் அங்கிருந்து திரும்
பும் வழியில் இராமேஸ்வரத்திலுள்ள மக்களால் தடுத்து
வைக்கப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். இவ்
வித இடையூறுகளுக் கிடையிலும் பால்தேயுவின் மதச்சேவை
வெற்றி பெற்றமையை அவரது சமகால ஆவணங்கள்
உறுதிப்படுத்துகின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பால்
தேயுவின் மதச் சேவை நிலையான வெற்றிகளை ஏற்படுத்து
வதற்குப் பல காரணிகள் தடையாகவிருந்தன கல்வின்
மதம் கீழைத்தேய நாடுகளுக் கேற்றதாக அமைந்திருக்க
வில்லை. பைபிளையே அடிப்படையாகக் கொண்டு ஓரளவிற்கு
கல்வியறிவும் அவசியமாகியது திருமணத்தில் தாலிகட்டு
தல், சைவ உணவு உட்கொள்ளல், ஆகியனவற்றை எதிர்த்
தனர். அசைவ உணவு உண்டால் சாதியில் குறைந்தவர்
களென அக்கால மக்கள் நம்பினர். பௌத்தமதம், இந்து
மதம், கத்தோலிக்க மதங்களில் காணப்பட்ட வெளிச்சமய
அநுட்டானங்களும் கல்வின் மதத்தில இடம் பெறவில்லை

ஒல்லாந்த திருச்சபைக்கும் அரசாங்கத்திற்குமிடையே
தோன்றிய தகராறுகளும் மதப்பிரசாரத்தில் உற்சாகமாக
பால்தேயு போன்றோர் ஈடுபடத் தடையாகவிருந்தன. திருச்
சபை சுதந்திரமாக அரசியலதிகாரம் கொண்டு செயற்படு
வதை ஒல்லாந்து அரசாங்கம் விரும்பவில்லை. பால்தேயு
புரட்டஸ்தாந்து திருச்சபைக்கு மத்திய மயமான அமைப்பை
ஏற்படுத்தினார். 1659-ம் ஆண்டு கொழும்பில் பிரசங்கிகள்
கூடி இலங்கையில் சமயப்பிரசார வேலைகளைத் துரிதப்படுத்

www.tamilarangam.net



துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மதக் கொள்கைகள், திருமணம், ஞானஸ்ஞானம் நடாத்தும் முறைகள் பற்றித் தீர்மானிக்கப்பட்டது. பிரசங்கிகளின் கடமைகள் வரையறுக்கப்பட்டன. சுதேசிகளுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இருதரம் போதிக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். கிழமை நாட்களில் சுதேச மொழிகளைக் கற்க ஓய்வு அளிக்கப்பட வேண்டுமெனக் கூறினர். இவ்விதம் யாழ்ப்பாணம், மன்னார், காலி, கொழும்பிலுள்ள திருச்சபைகள் ஒன்றாக இணைந்து மத்தியமயமாக்கப்பட்ட திருச்சபை நிர்வாகத்தை ஏற்படுத்த மேற்கொண்ட நடவடிக்கையைப் பற்றேவியா அரசாங்கம் தடை செய்தது. இத்தீர்மானங்கள் திருச்சபை அரசுத் தகராற்றினைத் தோற்றுவிக்கக் காரணமாகியது.

பாடசாலை நிர்வாகத்திலும் ஒல்லாந்த திருச்சபைக்கும் அரசாங்கத்திற்குமிடையில் தகராறு ஏற்பட்டது. கம்பெனியின் பொறுப்பிலேயே பாடசாலைகள் அமைந்திருக்க வேண்டுமென விரும்பித் திசாவைகளிடம் அவற்றினை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தினை விட்டுவைத்தது. 1664-ம் ஆண்டு வான்கோயன்ஸ் இரண்டாவது முறையும் ஆள்பதியாகப் பதவியேற்றபோது பற்றேவியா அரசாங்கம் பிரசங்கிகள் பாடசாலை மேற்பார்வை, நிர்வாகம் ஆகியனவற்றில் பங்குகொள்ளக் கூடாதெனக் கட்டளையிட்டது. வான்கோயன்ஸ் இக்கட்டளையை நிறைவேற்ற முயன்றபோதே தகராறு தோன்றியது. பிரசங்கிகள் திசாவைகளின் அனுமதியுடனேயே செயற்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. கிராமத்திற்கு, கிராமத்தலைவருக்கு, சுதேச உத்தியோகத்தர்களுக்கு கட்டளைகளைப் பிறப்பிக்க முடியாது எனத் தீர்மானிககப்பட்டது. மாணவர்களுக்குத் தண்டனை அளித்தல், தினப்பதியேட்டியிலிருந்து மாணவர்களை நீக்கல் ஆகிய அதிகாரங்கள் நீக்கப்பட்டன. வான்கோயன்ஸ் திசாவைகள் பிரசங்கிகளின் ஆலோசனையுடன் செயற்பட வேண்டுமெனக் கூறியிருந்த போதும் நடைமுறையில் வெற்றியளிக்கவில்லை. பிரசங்கிகள் பாடசாலைகள் மூலம் மதம் பரப்புதல் இலகுவெனவும், ஆசிரியர்கள் நியமனம், வேலை நீக்கம், பாடசாலை



களை கண்காணிக்கும் அதிகாரங்கள் தம்மிடம் விடப்பட வேண்டுமெனவும் கோரி நின்றனர்.

பொருளாதார சிக்கனத்தைக் கருதியும் ஒல்லாந்த கம்பெனி பாடசாலையைப் பராமரிப்பதற்கும் ஆசிரியர்களின் வேதனத்திற்கும் பணம் அளிக்கவில்லை. பிரசங்கிகள் பாடசாலையின் பராமரிப்புக்குப் பலமுறை பணவுதவி கோரியும் கம்பெனி மறுத்து விட்டது. மற்றும் வேதாந்த சாஸ்திரம் மட்டும் படித்த இளம் வயதுடைய திருச்சபை உத்தியோகத்தர்களைக் கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி அவர்களைப் பிரசங்கிகள் வரை பதவியுயர்வு பெற இடமளித்தனர். இத்திருச்சபை உத்தியோகத்தர்கள் உண்மையில் நோயாளிகளைப் பரமரிப்பவர்களாகவே யிருந்தனர். அத்துடன் ஞாயிறு பாடசாலைகளையும் பைபிள் வகுப்புக்களையும் நடாத்தினர். இவர்கள் இளைஞர்களாகவிருப்பதால் ஆசிய மொழிகளை இலகுவில் கற்று முன்னேறுவர் எனப் பற்றேவியா அரசாங்கம் கருதியது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் பற்றேவியா அரசாங்கமும் திருச்சபையும் கம்பெனி இயக்குநர்களும் இவர்களின் பதவியுயர்வுக்கு அனுமதி வழங்கியும் இலங்கையிலுள்ள பிரசங்கிகள் அனுமதி யளிக்க மறுத்தனர்.

நீண்ட காலமாகப் பிரசங்கிகளுக்கும் ஒல்லாந்த கம்பெனிக்குமிடையிலேற்பட்ட தகராற்றில் திருச்சபைமீது குற்றம் முழுவதையும் கம்பெனி சுமத்தி மக்களிடம் நல்ல அபிமானத்தைப் பெறமுயன்றது. பால்தேயுவினால் இத்தகராறு உச்சநிலையை அடைந்தது. பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் முறை திசாவைகளினால் மற்றைய பகுதிகளில் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் யாழ்ப்பாணப் பகுதியில் தீவிரமாகப் பின்பற்றப்படவில்லை. எனினும் திசாவைகள் பாடசாலைப் பரிசோதகர்களாகக் கடமையாற்றலாம் என்ற கம்பெனியின் புதிய கட்டளையை இவர் அங்கீகரிக்க மறுத்தார். இத்தகராற்றினால் பதவியை விட்டுச் செல்லவும் தயாராகவிருந்தார். 1665-ம் ஆண்டு பால்தேயுவின் பதவிக்கால ஒப்பந்தம் முடிவெய்தியதும் இலங்கையை விட்டுச் செல்வதற்கு அனுமதி கோரினார். கொழும்பிலுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியற் சபை அங்கத்தவர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்து இவரை மனமாற்றம் செய்ய முயன்றும் தோல்வியடைந்தார். இலங்கையில் போதியளவு பிரசங்கிகள் இல்லாமையினால் மேலும் இரண்டு வருடங்கள் தொடர்ந்து பதவியிலிருக்கும்படி கம்பெனி கோரியது. பால்தேயு தனது முடிபை மாற்றத் தயாராக இருக்கவில்லை. இவ்விதம் பால்தேயு பிடிவாதமாக மறுத்து நின்றமையை வான்கோயன்ஸ் தனது அரசியல் இறைமைக்கு எதிரான சவாலாகக் கருதினார்.

பால்தேயுவை வான்கோயன்ஸ் ஆத்திர மேலீட்டால் ஐரோப்பாவிற்குச் சென்ற அடுத்த கப்பலிலேயே அனுப்பி வைத்தார். தனது நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காகப் பால்தேயுவின் மீது பலகுற்றங்களைச் சுமத்தினார். இவருக்கு அதிக வேதனம் அளிக்கப்பட்டதாயும் விருப்பப்படி வீடும் உடைமைகளும் வழங்கப்பட்டதாயும் கூறினார். மற்றைய பிரசங்கிகளைவிட கூடிய உரிமைகளை அனுபவித்ததாகவும் கூறப்பட்டது. எனினும் பால்தேயு சர்வாதிகாரி போல் நடக்கத் தென்பட்டாரெனவும், நிதிவிடயத்தில் ஊழல் மிகுந்தவராக விளங்கினாரெனவும் கூறினார். திருச்சபைக்கும் கம்பெனிக்கும் தகராறு தோன்றுவதைத் தவிர்க்கவே அவ்வித நடவடிக்கையிலீடுபட்டதாகக் கூறினார். பால்தேயு அனுபவித்த கட்டுப்பாடற்ற சுதந்திரமே இவ்வித தகராற்றிற்குக் காரணமாகியதெனலாம்.

ஒல்லாந்து நாட்டிற்குத் திரும்பியதும் இந்நூலை எழுதும் பணியிலீடுபட்டார். 1669ல் ஒல்லாந்தின் தெற்குப் பகுதியிலுள்ள தீவொன்றில் பிரசங்கியாக நியமனம் பெற்றுத் தனது நாற்பதாவது வயதில் 1672ம் ஆண்டு இறந்தார். பால்தேயுவின் திறமைகள் முழுவதும் இலங்கையில் பயன்படுத்தப்படவில்லை. அதற்குக் கம்பெனியே பொறுப்பாகவிருந்தது. கம்பெனியின் வர்த்தக நோக்கமும் பிரதேச ஆதிபத்தியக் கட்டுப்பாடும் சமய நடவடிக்கைகளைத் தடைசெய்தன.

பால்தேயுவின் நூல் இலங்கையிலிருந்து போர்த்துக்கீசரை விரட்டும் வரை அரசியல் வரலாற்றைக் கூறுகின்



றது. 1658ம் ஆண்டிற்குப் பின் சமுதாய சமய வரலாற்றையே அறிய உதவுகின்றது. 1656ம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்களை வேறு ஆதாரங்கள் மூலம் பெற்றே எழுதியுள்ளதால் அவற்றை அவதானத்துடன் கற்கவேண்டியுள்ளது. 1656ம் ஆண்டுக்குப் பின்னர் தான் நேரே அவதானித்தவற்றை எழுதியுள்ளதால் பெரும்பாலும் உண்மையெனக் கூறலாம். 1656ம் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவங்கள் இந்நூலின் முதல் நாற்பது அத்தியாயங்களிலும் கூறப்பட்டுள்ளன.

முதல் அத்தியாயத்தில் இலங்கையின் அடிப்படை வரலாறும் ஆதிகாலம் முதல் போர்த்துக்கீசர் வருகை மட்டுமான வரலாறும் கூறப்பட்டுள்ளது. இரண்டாம் அத்தியாயம் தொடக்கம் ஏழாம் அத்தியாயம்வரை போர்த்துக்கீசரின் வருகை தொடக்கம் ஒல்லாந்தரின் முதல் வருகை வரை கூறப்பட்டுள்ளது. இப்பகுதிக்கு போர்த்துக்கீசரது ஆதார நூல்களையே பயன்படுத்தியுள்ளார். எட்டாம் அத்தியாயம் தொடக்கம் நாற்பதாவது அத்தியாயம் வரை ஒல்லாந்தர் வருகை தொடக்கம் 1656ம் ஆண்டு மேமாதம் போர்த்துக்கீசரிடமிருந்து கொழும்பைக் கைப்பற்றும் வரை கூறப்பட்டுள்ளது. இவ் முப்பத்திரண்டு அத்தியாயங்களிலும் கூறப்பட்டுள்ளவைகள் கம்பெனியின் ஆவணங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன. 1655ம் ஆண்டுதொடக்கம் 1656ம் ஆண்டுவரை கொழும்பைக் கைப்பற்றியது பற்றிய நீண்ட வருணனை அவரது சமகாலத்தவர்களிடமிருந்து பெறப்பட்டதாகும்.

இந்நூலின் கடைசிப் பத்து அத்தியாயங்களிலும் பால்தேயு தான் நேரே அவதானித்தவற்றை விளக்கியுள்ளார். இப் பகுதியில் மன்னார், யாழ்ப்பாணம், ஒல்லாந்தரினால் எவ்வாறு கைப்பற்றப்பட்டது எனக் கூறப்பட்டுள்ளது. ஒல்லாந்த போர்வீரர்களுடன் பால்தேயு மதபோதகராகச் சென்றதால் அவர் வருணனைகள் உண்மையானவையெனக் கூறலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களின் வாழ்க்கை முறையையும், புரட்டஸ்தாந்து சமயம் இலங்கையில் முதன் முத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லில் எவ்வித பாதிப்பை ஏற்படுத்தியது என்பதையும் இப்
பகுதியில் விளக்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைப் பற்றிய இவரது மதிப்புரைகள்
நம்பக்கூடியனவாக உள்ளன. அப்பகுதியில் எட்டு வருட
காலம் மக்களுடன் நெருங்கிப்பழகி வாழ்ந்து இலங்கையை
விட்டுச் சென்றதும் அவற்றை மறக்காது உடனடியாக
எழுதியுள்ளார். இவரது தமிழ் மொழியறிவும் இந்துசமய
நம்பிக்கைகளை ஆராய்ந்தமையும், பதினேழாம் நூற்றாண்
டின் வட இலங்கையின் சமுதாய அமைப்பையும் அறிய
உதவுகின்றது.

பால்தேயு ஒல்லாந்தவராக இருந்தமையினாலும், ஒல்
லாந்த கிழக்கிந்திய கம்பெனியின் ஊழியனாகப் பணிபுரிந்
தமையினாலும் தமது இனத்தவர்களின் மேம்பாடு அவரின்
எழுத்துக்களில் காணப்படுகின்றது. இலங்கையின் கரையோ
ரப் பிரதேசங்களை ஒல்லாந்தர் கைப்பற்றிய வர்ணனைகளை
எழுதும்போது போர்த்துக்கீசர், தமிழர் சிங்களவரிடம் அனு
தாபம் இருந்ததாகத் தெரியவில்லை. சமய அடிப்படையிலும்
இவர் புரட்டஸ்தாந்து சமயப் போதகராயிருந்தமையினால்
மற்றைய சமயங்களில் அனுதாபம் கொள்வதற்கு அவசியம்
ஏற்படவில்லை.

கத்தோலிக்க மதப்பிரசார முறைகளை இவர் பின்பற்றி
னாலும் கத்தோலிக்க மதத்தை வெறுத்தார். சுதேசிகளின்
சமயங்களிலும் அவர் அநுதாபங் கொள்ளவில்லை. இந்து
சமய உண்மைகளை அறிய ஆர்வங்காட்டினாலும் அச்சமயத்
தின் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை அறிய முயலவில்லை.
இவரது பிரார்த்தனைக் கூட்டமொன்றில் ஆத்மா வேறு சரீ
ரத்தில் செல்லுதல்பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பல
கிறிஸ்தவவேத எடுகோள்களைக் கொண்டு விளக்கமுற்பட்
டார். ஆனால் இவை அக் கேள்விக்கு விடையாக அமைந்
திருக்க முடியாது.

பால்தேயுவின் மதசேவை வடபகுதியில் முழுமையாக
வெற்றி பெறவில்லை யென்பதை அவரே கூறியுள்ளார். கத்



தோலிக்கர்களை மதம் மாற்றுவது கடினமான செயலாக
விருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார். இந்துக்களுக்கும் கத்தோ
லிக்கர்களுக்கும் பழக்கப்பட்ட உருவ வழிபாடு புரட்டஸ்
தாந்து சமயத்தில் இல்லாமையினால் அவர்களைக் கவரமுடிய
வில்லை. கரையோரப் பிரதேசங்களில் புரட்டஸ்தாந்து மதத்
திற்கு மதம் மாற்றுவது வெற்றிபெறவில்லை யென்பதை
அவரே ஒப்புக் கொண்டுள்ளார். பால்தேயு தமிழ் மொழி
யையும் பழக்கவழக்கங்களையும் நன்கு அறிந்திருந்தாரெனக்
கூறமுடியாதிருக்கின்றது. சிறிதளவு அடிப்படை இலக்கண
அறிவையும் தமிழ்மொழியையும் அறிந்திருந்தார் என்றே
கூறலாம். குறுகிய காலம் மட்டுமே இப் பகுதியில் வாழ்ந்
தமையால் தமிழ் மொழியை நன்கு கற்கச் சந்தர்ப்பம் ஏற்
படவில்லை. எனினும், புரட்டஸ்தாந்து சமயத்தை இலங்கை
யில் அறிமுகம் செய்து அத்திவாரம் இடவேண்டிய பெரும்
பணி பால்தேயுவிடம் விடப்பட்டிருந்தது. இவர் தனக்கு
அளிக்கப்பட்ட பொறுப்பினைப் பூரணமாகச் செய்துமுடிக்கச்
சந்தர்ப்பம் அளிக்கப்படாவிட்டாலும் மற்றைய மிசனிமார்
கள் இவரின் அத்திவாரத்திலேயே சமய வேலைகளைக் கட்டி
யெழுப்பினர்.

) வ; தொ. 4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பால்தேயுவின் நூலிலிருந்து.....

## சமூக அமைப்பு, சமயம்: வாழ்க்கைமுறை

யாழ்ப்பாணம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அதன் நீளம் 12 மைல் தூரப்பிரயாணமும் அகலம் 6 மைல் தூரப் பிரயாணமுமாகும். தெருக்களின் அருகே கிராமங்களும் தேவாலயங்களும் உள்ளன.

x x x x

அதன் பகுதிகளாவன; வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி. வலிகாமப் பகுதியில் பதினுலு தேவாலயங்களிருந்தன. அவற்றுள் முக்கியமானது தெல்லிடபளையிலிருந்தது. இங்குதான் முதன்முதலில் 1658-ம் ஆண்டு ஆகஸ்டில் எனது சமயக் கோட்பாடுகளை அறிமுகப்படுத்தினேன்.

x x x x

தெல்லிப்பளைப் பகுதியில் வாழும் மக்கள் கூர்மையானவர்கள்; கபடமற்றவர்கள். அடிக்கடி புதுமையான கேள்விகளை என்னிடம் கேட்பார்கள். உலகத்தின் தோற்றம் முடிவு, உயிர்களின் பாவங்கள், நரகலோகம் போன்ற பல விடயங்களைப் பற்றியதாக அவை அமைந்திருக்கும்.

x x x x

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இரண்டு மணித்தியாலம் நடந்து சென்ருல் வட்டுக்கோட்டைத் தேவாலயத்தை அடையலாம். இங்கு மக்கள் போதனைகளைக் கேட்பதில் ஆர்வமுள்ளவர்கள். மக்கள் தொகை 2000 ஆகவிருந்தது.

x x x x

யாழ்ப்பாணக் கோட்டைக்கு அண்மையிலிருந்த சுண்டிக்குளியில் வாழ்ந்தமக்களில் பெரும்பாலானவர்கள் சிவியார்களாகும். இங்கு 450 பாடசாலை மாணவர்களிருந்தனர். ஆனுல் போதனைகளில் அக்கறை கொள்வதில்லை. பெற்ருேர்களுடன் மீன்பிடிக்கச் சென்றுவிடுவார்கள்.

x x x x



தென்மராட்சிப் பகுதியில் ஐந்து தேவாலயங்களிருந்தன; அவற்றுள் சாவகச்சேரியிலுள்ள தேவாலயமே பெரியதாகும். சாவகச்சேரியிலுள்ள பாடசாலையில் 1000 மாணவர்கள் கல்விகற்றனர்;

x x x x

வடமராட்சிப் பகுதியில் மூன்று திருச்சபைகளிருந்தன. இவற்றுள் பருத்தித்துறையிலிருந்த திருச்சபையே மிகப் பெரியதாகும். பருத்தித்துறையில் ஏழு அல்லது எட்டுமாதங்களுக்குக் கப்பல்கள் தங்கி நிற்கக்கூடியதாகவிருந்தது;

x x x x

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் நான்கு தேவாலயங்களிருந்தன. இப்பகுதி வரண்டதாகவும், மணற்பிரதேசமாகவும், நல்லதண்ணீர் அற்றதாகவும், யானைகளின் அழிவிற்கு அடிக்கடி உட்பட்டதாகவும் இருந்தது;

x x x x

வேளாளரே சாதியில் உயர்ந்தவர்களாவர். காற்சட்டை அணிவதைப் போன்று வேட்டி உடுத்துக்கொள்வார்கள். உடுத்துக் கொள்ளும்போது இடுப்பிற்கு முன்புறத்தில் மடியொன்றினை அமைத்து பாக்கு வெற்றிலை வைத்துக் கொள்வார்கள். எழுதுவதற்கு இரண்டு ஏடுகளையும் தம்முடன் எடுத்துச் செல்வார்கள்;

x x x x

வேளாளர் அற்ப விடயங்களுக்கும் நீதிமன்றத்திற்குச் செல்ல விருப்பமுடையவர். பொறுமையுடையவர்கள், பிதற்றல்காரர்கள், தங்களைவிட மேலானவர்கள் இல்லையென வாதாடுவார்கள்;

x x x x

பெண்கள் இளமையிலேயே திருமணம் செய்துகொள்வர். 10 அல்லது 11 வயதில் திருமணம் செய்து 13 அல்லது 14 வயதில் தாயாகிவிடுவார்கள்.

x x v x

யாழ்ப்பாணப் பகுதியில் இளம் வயதுள்ள பெண் அல்லது ஆண் பெற்ருேர்களின் சம்மதமில்லாமல் ஒன்று கூடுவதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். இது மிகவும் புகழ்ச்சிக்குரியதாகும்.

x x x x

சிவியார் யாழ்ப்பாண அரசனுக்குச் சேவை செய்தவர்கள். இப்பொழுது எங்களுக்கு இரண்டு அல்லது மூன்று மணித்தியாலம் நடந்து சென்று தண்ணீர் விநியோகிப்பார்கள்;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



x x x x

வேளாளர்களின் அடிமைகளாக நளவர்கள் உள்ளனர். இவர்களின் முக்கிய தொழில் மரங்களில் கள்ளுத் தயாரிப்பதாகும். நிலத்தைப் பண்படுத்துதல், மந்தைகளைப் பராமரித்தல், மரங்களுக்கு நீர் பாய்ச்சுதல், இவர்கள் மேற்கொள்ளும் மற்றைய தொழில்களாகும்.

x x x x

உயர்ந்த சாதியினரைத் தாழ்ந்த சாதியினர் சந்திக்கும்போது நிலத்தைநோக்கித் தாழ்ந்து வணங்கி மரியாதை தெரிவிப்பர்.

x x x x

கணவனும் மனைவியும் ஒருமித்து உண்பதில்லை. கணவன் உண்டபின் மனைவி தனித்து [உண்பாள்.

x x x x

முதிர்ந்த வயதினையுடையவர்களிடையே விக்கிரக வழிபாடு, பேய் வழிபாடு தொடர்ந்து நிலவின. இவ் விநோதமான கோட்பாடுகளையுடைய நூல்கள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

x x z z

உண்ணுட்டுச் சட்டங்களைப்பற்றி அறிவுடைய பலர் இப் பகுதியிலிருந்தனர். உரத்த சத்தத்தில் வழக்கறிஞர்கள் போன்று நீதி மன்றங்களில் பிரசங்கம் செய்வர்.

x x x x

வைத்தியர்கள் அதிகம் இருந்தனர். ஆனுல் உடற்கூறு சாஸ்திர அறிவற்றவர்களாகவிருந்தனர். அவர்களது வைத்தியம் அனுபவ அடிப்படையிலும், மூதாதையர்கள் விட்டுச்சென்ற எழுத்துச் சுவடிகளின் அடிப்படையிலும் அமைந்திருந்தது.

x x x x

யாழ்ப்பாணக் கோட்டையில் ஒல்லாந்தரைக் கொன்று கோட்டையைக் கைப்பற்ற முயன்ற சதித்திட்டம் முறியடிக்கப்பட்டு, பங்குபற்றியவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. சதித்திட்டத்தை உருவாக்கிய மூவரும் தண்டனையளிக்க உபயோகிக்கும் சட்டத்தில் பிணைக்கப்பட்டு, கோடாலியினுல் முதலில் தொண்டையிலும் பின்னர் மார்பிலும் வெட்டப்பட்டனர். பின்னர் அவர்களது இருதயம் வெளியே எடுக்கப்பட்டு அவர்களின் நம்பிக்கைத் துரோக முகங்களில் செலுத்தப்பட்டது.

# இலங்கைத் தீவின் வரலாற்றுத் துன்பியல்நாடகம்

— யோ. றிபேறியோ —

இலங்கை வரலாற்றில் றிபேறியோ எழுதிய ''இலங்கைத் தீவின் வரலாற்றுத் துன்பியல்நாடகம்'' என்னும் நூல், குவைறொஸ் சுவாமிகள் எழுதிய அதே காலப் பகுதியையே விபரித்துச் செல்கின்றது. குவைறொஸினது நூலைவிட றிபேறியோவின் நூலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கலாம். குவைறொஸ் இலங்கைக்குக் காலடியெடுத்து வைக்காமலே தனது நூலை யெழுதி முடித்தார். ஆனுல் றிபேறியோ பதினெட்டு வருட காலம் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்வீரனுக தாழ்ந்து தான் பெற்ற அநுபவங்களைத் தனது நூலில் நன்கு விளக்கியுள்ளார்.

யோ றிபேறியோ இலங்கைக்கு 1640-ம் ஆண்டு போர்த்துக்கீசப் போர்வீரனுக வந்தார். இலங்கையில் போர்த்துக்கீசரால் ஒல்லாந்தருக்கெதிராகவும், சிங்களவருக் கெதிராகவும் மேற்கொள்ளப்பட்ட எல்லாயுத்தங்களிலும் பங்குபற்றினுர். 1643-ம் ஆண்டு காலியை முற்றுகையிட்டதிலும் அக்குரஸவில் வெற்றியீட்டியதிலும் 1645-ம் ஆண்டு நான்கு கோறளைகளைக் கைப்பற்றுவதிலும் இவரது திறன் நன்கு வெளிப்பட்டது. கொழும்பை முற்றுகையிட்டுக் கைப்பற்றுவதிலும் பங்கு கொண்டு காயமடைந்தார். 1656-ம் ஆண்டு கொழும்பை இறுதியாக ஒல்லாந்தர் கைப்பற்றியவுடன் நாகபட்டணம் தப்பியோடியவர்களில் இவரும் ஒருவராவர். இலங்கைக்கு மீண்டும் திரும்பிவந்து மன்னுரிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள போர்த்துக்கீசச் கோட்டைகளையும் அரண்களையும் பாதுகாத்து நின்று இறுதியில் பற்றேவியாவிற்கு யுத்தக் கைதியாக அனுப்பப்பட்டார்.

இலங்கையில் தனது பதினெட்டு வருடகால சேவையில் மூன்றுமுறை படைத்தலைவனுகப் பதவியுயர்வு பெற்றுர்.

www.tamilarangam.net



பிறப்பினை யடிப்படையாகக் கொண்டே அக்காலத்தில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதால் இவை நிரந்தரமாகவிருக்கவில்லை. 1640-ம் ஆண்டு தொடக்கம் 1658-ம் ஆண்டுவரை நடைபெற்ற யுத்தங்களை மிக விரிவாகத் தமது நூலில் விளக்கியுள்ள குவைறொஸ் றிபேறியோவின் பெயரைக்கூடத் தனது நூலில் குறிப்பிடாதமை வியப்பிற்குரியதாகும். பற்றேவியாவில் யுத்தக் கைதிகளை வைத்திருப்பதால் ஒல்லாந்தருக்குப் பல சிக்கல்கள் ஏற்பட்டன. இறுதியில் கைதிகளுக்கு விடுதலையளிக்கப்பட்டபோது றிபேறியோ 1660-ம் ஆண்டு போர்த்துக்கலுக்கு அனுப்பப்பட்டார். அங்கு தொடர்ந்து போர்வீரனாகப் பதவி வகித்து 1680—ம் ஆண்டு ஒய்வு பெற்றார். தனது நூலில் நாற்பது வருடங்களாக ஒரு நாளையேனும் தவறாது பணிபுரிந்ததாகக் கூறியுள்ளார். இக் காலத்தில் தான் "இலங்கைத்தீவின் வரலாற்றுத் துன்பியல்நாடகம்" என்னும் நூலை எழுதிமுடித்து போர்த்துக்கல் மன்னன் இரண்டாம் பீட்ரோவிற்கு 1685—ம் ஆண்டு அர்ப்பணித்தார்.

றிபேறியோவினது நூலில் அத்தியாயங்கள், சம்பவங்கள் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டுப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை குவைறொஸினது நூலில் காணமுடியாதவையாகும். இவர் தனது நூலில் எங்கு கற்றார் யாரிடம் கற்றார் என்பதை ஓரிடத்திலும் கூறவில்லை. யுத்தகாலத்தில் காடுகளிலும் முற்றுகைகளிலும் கற்றிருக்கமுடியாது. இலிஸ்பனில் பெற்ற ஆரம்பக்கல்வியே இவருக்கு உதவியாகவிருந்திருக்க வேண்டும். இவரது நூலினது நடை போர்வீரனது நடையைப் போன்று நேரடியாக எழுதப்பட்டுள்ளது.

குவைறொஸினது நூலின் அமைப்பை யொட்டியே இவரது நூலும் அமைந்துள்ளது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாம் பகுதியில் இலங்கையின் அமைப்பு, மாகாணங்கள், கோட்டைகள், மக்களைப் பற்றிய வர்ணனைகள், சடங்குகள் விழாக்கள், பழக்க வழக்கங்கள் என்பனவும் போர்த்துக்கல் அரசனுக்குத் தர்மபாலன் அளித்த அரசுரிமையும் விளக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதியில் இலங்கையில் மேற்கொண்ட யுத்தங்களின் போக்குகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. 1627-ம்



ஆண்டு தொடக்கம் சிங்களவர்களுடன் மேற்கொண்ட யுத்தங்கள் பற்றியும், 1638—ம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தருடன் மேற்கொண்ட யுத்தங்கள் பற்றியும், 1658—ம் ஆண்டு போர்த்துக்கீசர் விரட்டப்படும் வரை நடைபெற்ற யுத்தங்கள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது பகுதியில் போர்த்துக்கீசரின் கீழைத்தேய சாம்ராச்சியம் சீர்குலைந்தமைக்குரிய காரணங்களை ஆராய்ந்துள்ளார். ஏன் தனது நாட்டவர்கள் இலங்கையைப் பாதுகாக்க முடியாமல் விட்டுவிலகினர் என்பதையும் விளக்கியுள்ளார். இலங்கையை மட்டும் முழுமையாகக் கைப்பற்றி ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதைவிட்டு இந்தியாவைக் கைப்பற்றுவதில் ஏற்படுத்திய ஈடுபாடுகளைக் கண்டித்துள்ளார். கீழைத்தேய சாம்ராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கு எதிரிகளின் பலத்தைவிட தாங்கள் செய்த பாவங்களே காரணமெனக்கூறியுள்ளார். றிபேறியோவின் நூல் முழுவதும் சுவாரஸ்யமாக எழுதப்பட்டிருப்பினும் முதலாம் மூன்றும் பகுதிகளே முக்கியமானவைகளாகவுள்ளன.

இலங்கையில் றிபேறியோ பதினெட்டு வருடகாலம் சேவையிலீடுபட்டிருந்தாலும் தனது நூலைக் கிட்டத்தட்ட கால்நூற்றாண்டுக்குப் பின்னரே எழுதியுள்ளார். யுத்தங்கள் முற்றுகைகள் பற்றிய குறிப்புக்கள் விபரங்கள் பல பிழைகளைக் கொண்டுள்ளன. இவரது நூலில் குறிக்கப்படும் ஆண்டுகள் பெரும்பாலும் சரியானதாயிருக்கவில்லை. தனது வயதைக்கூடச் சரியாக அறிந்திராதவராக இவர் இருந்துள்ளார். இலங்கையை வந்தடையும்போது தனது வயது பதினைந்து எனக் கூறியுள்ளார். ஆனால் உண்மையில் இவரின் வயது பதினெட்டாயிருந்திருந்தது.

றொபேட் நொக்ஸ் கண்டியிராச்சியத்தை யறிந்திருந்தது போன்று இவரது அநுபவங்கள் கரையோரப் பிரதேசங்களிலேயே அமைந்திருந்தது. றிபேறியோவை நொக்ஸினுடன் ஒப்பிடுமிடத்து இவர் கடினமான வாழ்க்கையே வாழ்ந்துள்ளார். நொக்ஸ் தனது நூலிலோ அல்லது சுயசரிதையிலோ இலங்கைக்குச் சுதந்திரமனிதனாகத் திரும்பி வருவது பற்றிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறிப்பிடவில்லை. ஆனால் றிபேறியோ இலங்கையின் இயற் கையழகில் ஈடுபாடு கொண்டவராக விளங்கியுள்ளார். இலங் கைத்தீவின் வசீகரத்தை மறக்க முடியாது என்று கூறியுள்ளார்.

றிபேறியோ நொக்ஸைப்போன்று சிங்கள மொழியை அறிந்திருக்கவில்லை. ஆனால் சிங்களமொழியின் சிறப்பு இரு வரையும் கவர்ந்துள்ளதைக் காணலாம். றிபேறியோ அவர் களது வழக்கப்படி சிறந்த கவிஞர்களாகவிருந்தனர் என்றும், அவர்களின் பாடல்கள் இனிமையானதாகவும் மகிழ்வளிக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தது எனவும் கூறியுள்ளார். றிபே றியோ மேலும் குறிப்பிடுமிடத்து "அவர்கள் கூறுவது விளங்காவிடினும் நாங்கள் செய்யும் தொழில்களையே மறந்து அவற்றை அவதானிப்போம்" என்றுள்ளார். நொக்ஸ் சிங் கள மொழியை உழவர்கள் பேசும்போது நேர்த்தியான தாக வும் புகழுரைகளுடன் கூடியதாகவும் அமைந்திருக்கும் என் றுள்ளார்.

சிங்களவர்களின் தோற்றம் ஐரோப்பியர்களை ஒத்துக் காணப்பட்டதென நொக்சும் றிபேறியோவும் கூறியுள்ளனர். றிபேறியோ அவர்களது இயல்புகள் போர்த்துக்கீசரினதைப் போன்றவையென்று கூறியபோது நொக்ஸ் அவர்கள் செய லிலும், நடத்தையிலும் போர்த்துக்கீசர்களைப் போன்றவர் களே யெனக் கூறியுள்ளார். சிங்களப் பெண்களில் அவலட் சணமானவர்கள் அருமையாகவே உள்ளனர் என றிபே றியோ கூறியுள்ளார். அவர்கள் எல்லோரும் அழகான கண் களை உடையவர்கள், சுத்தமானவர்கள்; ருசியாகச் சமையல் செய்வார்கள். தலைமயிரில் அதிக கவனம் செலுத்துவார்கள்; இவர்களின் உடை இந்தியப் பெண்களின் உடையைவிடச் சிறந்தது எனக் கூறியுள்ளார்.

கிராமிய அமைப்பு முறைகளைப் பொறுத்தமட்டில் நொக்ஸ் குவைறோஸ் ஆகிய இருவரும் றிபேறியோவைவிட கூடிய விபரங்களைத் தந்துள்ளனர். சிங்களவர்களின் நாளாந்த வாழ்க்கையை நொக்ஸ் நன்கு படம் பிடித்துக் காட்டியுள் ளார். கரையோரப் பிரதேசங்களிலுள்ள முக்கிய நிகழ்ச்சி



களையே றிபேறியோ தனது நூலில் எழுதியுள்ளார். அம் பில் நடைபெற்ற முத்துக்குளிப்பு, யானைகள் பிடித்தல், கறுவா எண்ணெய் வடித்தல், இரத்தினக்கற்கள் பெறுதல் ஆகியனபற்றிய குறிப்புக்கள் ருசிகரமானவையாக உள்ளன.

நொக்ஸைப் போன்றே றிபேறியோ இலங்கையிலுள்ள மக்களைச் சோம்பேறித்தனமானவர்களென மதிப்பிட்டா லும், தமது நூலின் பல விடங்களில் இதற்கு நேர்மாறான கருத்தைக் கூறியுள்ளார். சிங்களவர்கள் நீண்டகாலம் எண் பது வயதிலும் திடகாத்திரமாக வாழ்வதை இவரும் நொக்சும் ஆச்சரியத்துடன் நோக்கியுள்ளனர். நொக்ஸ் நூறு வயதுடைய மனிதரைக் கண்டதாகக் கூறியுள்ளார். ஆனால் றிபேறியோ 120 வயதுடைய தந்தையையும், 90 வயது டைய அவருடைய மகனையும் தனக்குத் தெரியுமெனவும், அவர்களுடன் கதைத்துள்ளதாகவும் கூறியுள்ளார். சாதி வேற்றுமை பற்றி றிபேறியோ சுருக்கமாக; ஆனால் தெளி வாகக் கூறுகின்றார். சிங்களவரின் வழக்கமான கொதிக் கும் எண்ணெயில் சத்தியப் பிரமாணம் செய்வதை மிகைப் படுத்திக் கூறியுள்ளார்.

றிபேறியோ போர் வீரனாகவிருந்ததால் யுத்தங்கள், இராணுவ அமைப்புப்பற்றிய விபரங்களே முக்கியமாக விவ ரிக்கப்பட்டுள்ளன. ஆசியாவிலுள்ள போர்த்துக்கீசப் போர் வீரர்களில் திருமணமானவர்களுக்கும் திருமணமாகாதவர் களுக்கும் கடமைகள் வேறாகவிருந்தன. திருமணமாகாத போர்வீரர்கள் எந்தப் பகுதியிலும் எந்த நேரத்திலும் யுத்தத்திலீடுபடத் தயாராகவிருக்கவேண்டும். மற்றவர் கள் உண்ணாட்டுப் பாதுகாப்புச் சேவைக்கும் விசேட அவ சரகாலச் சேவைக்குமே அழைக்கப்படுவர்.

இலங்கையில் பெரும்பாலும் 700 போர்த்துக்கீசப் போர் வீரர்களே இருந்துவந்துள்ளனரென றிபேறியா கூறியுள் ளார். ஆனால் கூலிப் படையினரின் தொகை 15000 ஆக விருந்தது. இவர்கள் நான்கு பாசறைகளில் பிரித்து வைக் கப்பட்டனர். ஏழுகோறளை, நான்குகோறளை, சப்பிரகமுவா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாத்தறை ஆகியவிடங்களிலும், இறுதியாக ஒல்லாந்தர் வந்திறங்கிய பின்னர் காலியிலும் ஒருபாசறை அமைக்கப்பட்டது. போர்த்துக்கீசப் போர் வீரர்கள் 36 அல்லது 37 பேர்களைக் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு வேதனம் வருடத்தில் இருமுறை அளிக்கப்படும். கிறிஸ்மஸ்ஸிற்கும் கோடையிலும் வேதனம் வழங்கப்பட்டது. ஒரு குழுவில் கட்டாயமாகச் சேவைசெய்ய வேண்டியகாலம் ஆறுமாதம் மட்டுமேயாகும். தமது விருப்பத்தின்படி வேறுகுழுக்களுக்கு மாறிச் சேவை செய்யக் கூடியதாகவிருந்தது. போர்வீரர்களாகச் சேவை செய்பவர்கள் பிரதம தளபதியின் அனுமதியுடனேயே நாட்டைவிட்டு வெளியேற முடியும். இக்கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மரண தண்டனைக்குட்படுவார்கள் என றிபேறியோ கூறியுள்ளார்.

போர்த்துக்கீசப் போர்வீரர்களின் ஒழுக்கம் உண்மையில் அவர்கள் பெறும் வேதனத்திலேயே தங்கியிருந்தது. வேதனம் கொடுபடாவிட்டால் ஒழுக்கயீனங்களில் ஈடுபட்டு நாட்டுப் புறங்களில் சூறைய[illegible] ஈடுபட்டனர். இலிஸ்பனில் சிறைச்சாலைகளில கைதிகளாக உள்ளவர்களே இங்கு பெரும்பாலும் போர் வீரர்களாக அனுப்பப்பட்டதால் ஒழுக்கவீனம் மலிந்திருந்தது.

போர் வீரர்களுக்குரிய உணவுப் பண்டங்கள் பெரும்பாலும் கிராமத்தவர்களாலேயே வழங்கப்பட்டு வந்தன. போர்வீரர்கள் ஓரிடத்திலிருந்து மறுவிடத்திற்குச் செல்லும் வழியில் தங்குவதற்குரிய வசதிகளைக் கிராமத்தலைவர்களே செய்து கொடுப்பர். போர் வீரர்களின் பாதுகாப்பில் கிராமத்தலைவர்கள் அதிக கவனமெடுப்பார்கள். ஏனெனில் ஒரு போர் வீரனின் உயிர் முழுக்கிராமத்தின் அழிவிற்கே காரணமாகவிருக்கலாம்.

காடுகளில் யுத்தங்களிலீடுபடும்போது அதிகாலை மூன்று மணிக்கே காலையுணவை முடித்துக் கொண்டு யுத்தத்திற்குத் தயாராகுவார்கள். இரத்தம் உறிஞ்சும் அட்டைகள், பாம்புகள் இருந்தும் தனித்தனியாகப் பாதணிகளின்றிச்



செல்வர். கூலிப்படையினரே உணவு வெடிமருந்துகள் போன்றனவற்றை எடுத்துச் செல்வர். போர்த்துக்கீசப் போர் வீரர்கள் ஆயுதங்களை மாத்திரம் எடுத்துச் செல்வர். மரம் வெட்டும் தொழிலாளர்களிலிருந்து தெரியப்படும் கூலிகளே நம்பிக்கையானவர்களெனவும், தோல்வி யேற்பட்டாலும் தமது உயிரையே தியாகம் செய்வார்களெனவும் றிபேறியோ கூறியுள்ளார்.

இந்நூலின் இரண்டாம் பகுதி போர்த்துக்கீசர் ஒல்லாந்தருடனும் சிங்களமன்னர்களுடனும் மேற் கொண்டிருந்த யுத்தமுறைகளைக் கூறினாலும் மற்றைய பகுதிகளைப் போன்று சுவாரஸ்யமானதாக விருக்கவில்லை. றிபேறியோ 1640-ம் ஆண்டு தொடக்கம் 1658-ம் ஆண்டுவரை எல்லா யுத்தங்கள் படையெடுப்புகள் முற்றுக்கைகள் ஆகியனவற்றில் பங்கு கொண்டாலும் குவைறோஸின் நூலிலுள்ள விபரங்களை விடக் குறைவாகவே யுள்ளது. யுத்த விபரங்கள் நம்பமுடியாதவைகளாகவுள்ளன. சிங்களவர்களிலும் ஒல்லாந்தர்களிலும் காயமுற்றவர்கள் எண்ணிக்கையை மிகைப்படுத்திக் கூறுகின்றார்.

றிபேறியோ போர்த்துக்கீசரிடம் யுத்த இரகசியங்களைப் பாதுகாக்கும் திறன் இல்லையெனக் கூறுகின்றார். இதுவே போர்த்துக்கீசரின் தோல்விக்கு மூலகாரணமாக விருந்தது என்றுள்ளார். 1638-ம் ஆண்டு முதல் 1658-ம் ஆண்டு வரை போர்த்துக்கீசர் ஒல்லாந்தருக் கெதிராகவும், இரண்டாம் இராசசிங்கனுக் கெதிராகவும் முக்கோண யுத்தத்திலீடுபட்டிருந்தமையால் தோல்வியடையவேண்டி நேரிட்டது எனக் கூறியுள்ளார்.

ஒல்லாந்தரினால் கொழும்பு முற்றுகையிடப்பட்டுக் கைப்பற்றியது பற்றிய விபரங்கள் நம்பமுடியாதவைகளாயுள்ளன. ஒல்லாந்தர் கொழும்பு கைப்பற்றப்பட்டபின் சரணடைந்த மக்களை நன்கு நடாத்தினரென்பது மற்றைய போர்த்துக்கீச ஒல்லாந்த ஆசிரியர்களின் கூற்றுக்கு முரணாகவுள்ளன. ஆனால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டபின்னர் ஒல்லாந்தரின் முறைகேடான செயல்கள் பற்றிய விபரங்கள் மற்றைய ஆதாரங்களுடன் ஒத்துக் காணப்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்றாவது பகுதியில் போர்த்துக்கீசரின் கீழைத்தேய குடியேற்ற நாட்டுக் கொள்கையை விமர்சித்துள்ளார். இந்நூல் 1836-ம் ஆண்டுவரை வெளியிடப்படாம லிருந்தமைக்கும் இவரது கருத்துக்கள் காரணமாகவிருக்கலாம். போர்த்துக்கீசர் தம்மால் நிர்வகிக்க முடியாதளவிற்கு சாம்ராச்சியத்தை விஸ்தரித்திருந்தமையே சீர்குலைவிற்குக் காரணமெனக் கூறியுள்ளார். கோவா ஓர்மஸ் மலாக்கா ஆகியவற்றுடன் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கத்தை நிலைநாட்டி இலங்கையைக் கைப்பற்றிக் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியிருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். குவைறொஸ் சுவாமிகள் கூறிய கருத்துக்களுடன் றிபேறியோவின் கருத்தும் ஒத்துக்காணப்படுகின்றது.

போர்த்துக்கல் மன்னன் நான்காம் யோன் நோயுற்றிருந்தமையாலும் ஆலோசகர்களின் ஆலோசனையின்மையாலும் இலங்கையைத் திரும்பவும் கைப்பற்ற எண்ணவில்லையெனக் கூறியுள்ளார். ஆனால் வேறு சமகால ஆதாரங்கள் எதிர்மாறான கருத்தைத் தருகின்றன. இலிஸ்பனிலும் கோவாவிலுமுள்ள வரலாற்று ஆவணங்களை ஆழ்ந்து நோக்கினால் அங்குள்ள நிர்வாகிகளும் அரசனும் இலங்கையின் விதியை யெண்ணி அதிக அக்கறையும், செயற்பாடும் கொண்டிருந்தனரென்பது தெளிவாகும்.

இரண்டாம் இராசசிங்கன் 1656-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒல்லாந்தர்களின் நடத்தைகளால் வெறுப்புற்று போர்த்துக்கீசரைத் தனது நண்பர்களாக்க விரும்பினானெனக் கூறுகின்றார். கண்டியிராச்சியம் சுயதேவைப் பொருளாதாரத்தையுடையதெனவும் கரையோரப் பிரதேசத்திலுள்ள கறுவா வியாபாரத்தில் அவன் அக்கறை கொள்ளவில்லையெனவும் கூறியுள்ளார். ஆனால் இராசசிங்கன் ஒல்லாந்தரைப் போர்த்துக்கீசரைவிட அபாயம் குறைந்த எதிரியாகக் கணித்துள்ளான். அவனது ஆட்சியின்போது ஒல்லாந்தர் கண்டியைத் தாக்க முன்வரவில்லை; ஆனால் யோர்த்துக்கீசர் பலமுறை சிங்களவர்களுடன் மேற்கொண்ட யுத்தங்களில் கண்டிக் கிராமங்கள் பலவற்றை எரித்தும் சூறையாடியும் இராசசிங்கனின் வெறுப்பைப் பெற்றிருந்தனர்.

றிபேறியோவின் நூல் மற்றைய மூன்று நூல்களைவிட சிறியதாகவிருந்தாலும் புதிய நடையைக் கொண்டது; அதிக விபரங்களையுடையது; சுவாரஸ்யமான முறையில் எழுதப்பட்டுள்ளது.

# றிபேறியோவின் நூலிலிருந்து . . . . .

## சிங்களவர் வாழ்க்கைமுறை; போர்த்துக்கீசர் போர்முறை

''கோட்டையரசனே இலங்கைத் தீவினுள் எம்மைச் செல்வதற்கு அனுமதித்தவன். கோட்டை இராச்சியத்தில் சிலாபத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திற்குப் பரந்திருக்கும் பகுதிகள் கறுவாக் காடுகளாகவுள்ளன. இவை அடர்ந்து காணப்படுவதால் அதற்குள்ளால் நடப்பது இயலாத தொன்றாகும்''

X X X X

''சிங்களவர்களின் பாடல்கள் இனிமையானதாகவும் மகிழ்வளிக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தன. அவர்கள் கூறுவது விளங்காவிடினும் நாங்கள் செய்யும் தொழில்களையே மறந்து அவற்றை அவதானிப்போம்''

X X X X

''அவர்களின் திருமணம் சிரிப்பிற்கிடமானதாகும். ஒரு பெண் தனது சாதியிலுள்ள இனத்தவரைத் திருமணம் செய்ய விரும்பினால், இனத்தவர்கள் திருமணத்தை நடாத்தி வைப்பர். அடுத்த நாள் மணமகனின் சகோதரன் அப்பெண்ணை மனைவியாக்குவர். மணமகனுக்கு ஏழு சகோதரர்களிருந்தாலும் அவள் ஏழு பேருக்கும் மனைவியாக வாழ்வாள்.''

X X X X

''சிங்களப் பெண்களில் அவலட்சணமானவர்கள் அருமையாகவேயுள்ளனர். எல்லோரும் அழகான கண்களை யுடையவர்கள்; சுத்தமானவர்கள்; ருசியாகச் சமையல் செய்வார்கள்; தலைமயிரில் அதிக கவனம் செலுத்துவார்கள்.''

X X X X

சிங்களவர்கள் பணத்தில் பேராசை கொண்டவர்கள்; இதனால் நம்பிக்கைத் துரோகமுடையவர்களாயுள்ளனர்; இந் நோக்கத்துடனே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்ற முன்வந்தாலும் பின்னர் தமது மதங்களையே பின்பற்ற முயல்வர்.

x x x x

''காடுகளில் போதியளவு உணவைப் பெறுவதினால் விவசாயம் செய்வதில் சோம்பேறிகளாகவுள்ளனர். உப்பு மட்டுமே அவர்களுக்கு அருமையாகவுள்ளது.''

x x x x

''சிங்களவர்கள் அதிக வயதிற்கு வாழ்வார்கள்; ஒரு தந்தையையும் மகனையும் எனக்குத் தெரியும்; அவர்களுடன் கதைத்துள்ளேன்; தந்தை 120 வயதும் மகன் 90 வயதும் உடையவர்கள்.''

x x x x

போர்வீரர்கள் தமது தலைவர்களின் தீர்மானங்கள் பற்றி ஆலோசிக்கக் கூடாது; அவற்றிற்கு உடன் கீழ்ப்படிதல் வேண்டும். கீழ்ப்படிய மறுத்த போர்வீரர்கள் மரத்தினடியில் சிரச் சேதம் செய்யப்படுவர்.

x x x x

''போர்வீரர்கள் சேவையை விட்டுத் தப்பியோட முயன்றால் மரணதண்டனை வழங்கப்படும்; பிரதம தளபதியின் அனுமதியுடனேயே வெளியேற முடியும். ஆனால் பெரும்பாலும் அனுமதி வழங்கப்படுவதில்லை.''

x x x x

''போர் வீரர்கள் பதவியுயர்வு கோருவதில்லை; பிரதம தளபதி படைத்தலைவர்கள் மூலம் போர் வீரர்களின் விசேட சேவைகளையறிந்து பதவியுயர்வு அளிப்பார்.

x x x x

''கண்டிய மன்னன் யுத்தத்திலீடுபடும் போது தனது படையின் முன்னே யானைகளின் துதிக்கையில் பெரும் வாள்களை, கத்திகளைப் பொருத்தி ஏவிவிடுவது வழக்கமாகும்.''

x x x x



''யானைகள் எம்மீது ஏவப்பட்டால் யானைகளின் கண்களுக்கு பிரகாசமான ரோச் வெளிச்சங்களைக் காட்டவே அவை எதிர்த்து வரமுடியாமல் தனது பக்கத்துப்படை வீரர்களிடையே ஓடி அழிவை ஏற்படுத்தும்.''

x x z x

''போர்த்துக்கீசப் பிரதம தளபதியான கொன்ஸ்ரான்டிசா கண்டியுத்தத்தில் திசாவைகளினாலும் சுதேசிப்படைகளினாலும் ஏமாற்றப்பட்டாலும் தோல்வி நெருங்கிக் கொண்டிருந்த கடைசித் தருணத்திலும், ஒரு கை துண்டிக்கப்பட்டாலும் மற்றக் கையில் வாளுடன் சுதேசிகளை மலைக்கணக்காகக் கொன்று குவித்தான். இறுதியில் ஈட்டிகளாலும், இராவைகளினாலும் கொல்லப்பட்டான்.

---

www.tamilarangam.net

# இலங்கையை ஆத்மீக இலௌகீகத் துறையில் வெற்றிபெறல்

— பெனுன்டி குவைறொஸ் —

இலங்கை வரலாற்றில் போர்த்துக்கீசர் காலப் பகுதியினைக் கற்பதற்கு பெனுன்டி குவைறொஸ் சுவாமிகள் எழுதிய "இலங்கையை ஆத்மீக இலௌகீகத் துறையில் வெற்றி பெறல்" என்னும் நூல் சிறந்த மூலாதாரமாக விளங்குகின்றது. அக் காலப் பகுதியின் அரசியல் சமுதாய சமய நிலைமைகளை அறிவதற்குச் சிறந்த உதவி நூலாகவுள்ளது.

குவைறொஸ் சுவாமிகள் 1617-ம் ஆண்டு போர்த்துக்கலில் பிறந்தார். ஆரம்பக் கல்விக்குப் பின்னர் மதசேவை செய்யும் பொருட்டு 1635-ம் ஆண்டு இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட முப்பது பேர்களில் இவரே வயதிற் குறைந்தவராக விளங்கினார். இவர் கோவாவில் தங்கியிருந்தபோது தத்துவஞான சாஸ்திரம் வேதசாஸ்திரம் ஆகியனவற்றில் திறமை மிக்கவராக விளங்கினார். பின்னர் வேதசாஸ்திரப் பேராசிரியராகத் தெரியப்பட்டார். மதஞானியாக மட்டுமிராது சிறந்த நிர்வாக ஆற்றலும் பொருந்தியவராக விளங்கியதால் கோவாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபையின் நிர்வாகியாகவும் தலைவராகவும் கடமையாற்றும் பேறு பெற்றார். 1688-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 10-ம் திகதி இவர் இறக்கும் வரையிலான 53 வருடங்களையும் இந்தியாவிற் கழித்தார்.

மதசேவையைவிடச் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவராகவும் விளங்கினார். இவரால் எழுதப்பட்ட நூல்கள் பல, 1664-ம் ஆண்டு சென்போல் கல்லூரியில் ஏற்பட்ட தீவிபத்தில் தீக்கிரையாகின. தீவிபத்தின் போது சுவாமிகளுடன் வாழ்ந்த வண. சகோதரர் ஒருவர் இவரது அறைக்குச்



சென்று சில குறிப்புக்களைத் தீயிலிருந்து காப்பாற்றினார். இதுவே பின்னர் பீட்ரோடி. பஸ்ரோவின் சுயசரிதையை எழுத உதவியாகவிருந்தது குவைறொஸ் தனது நூலில் இதுபற்றிக் குறிப்பிடுகையில் "இறைவனின் விசேட அற்புதத்தினாலேயே இது நிகழ்ந்தது" எனக் கூறியுள்ளார்.

ஒல்லாந்தரால் கொச்சின் 1663-ம் ஆண்டு கைப்பற்றப் பட்டபின் வண. சகோதரர் பீட்ரொ டி பஸ்ரோவின் வாழ்க்கை வரலாற்றினை எழுதும் பணி இவரிடம் விடப் பட்டது. பஸ்ரோவின் அந்தரங்கமான கடிதங்கள், டயரிகள், சத்தியப்பிரமாணங்கள் ஆகியன குவைறொஸ் சுவாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்தியாவில் போர்த்துக்கீசரின் எதிர்காலம் பற்றியும் இலங்கையில் போர்த்துக்கீசரின் தேய்வுநிலை பற்றியும், எழுதிய பஸ்ரோவின் கருத்துக்களில் இவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். இலங்கையில் போர்த்துக்கீசரின் வரலாற்றினை மேலும் ஆராயக் குவைறொஸ் தலைப்பட்டார். கொழும்பு ஒல்லாந்தரினால் கைப்பற்றப்பட்ட பத்து வருடங்களுக்குள்ளேயே இம் முயற்சி ஆரம்பமானது.

இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சியின் ஆரம்பகால வரலாற்றை அறிவதற்கு பரேஸ் கூற்றோ ஆகியோரின் நூல்களே உதவியாகவிருந்தன. குவைறொஸ் தனது சலியாத உழைப்பாலும் ஆராய்வுகளாலும் இவர்களிலும் கூடிய விபரங்களைப் பெற்றார். இலங்கைக்கு ஒருதடவைகூட வராமலிருந்தும் தனியாகவே வரலாறு எழுதக்கூடிய ஆதாரங்களைப் பெற்றார். இந்நூலினை அவர் எழுதுவதற்கு மூன்று காரணங்களைக் கூறலாம்.

இலங்கையில போர்த்துக்கீசர் ஆட்சிபற்றி வண. சகோதரர் பஸ்ரோ கூறியவை உண்மையென நம்பினார். இலங்கையைக் கிழக்கிந்திய நாடுகளின் தலைநகராக்காமல் விட்டது தவறு எனக் கண்டார். இலங்கையிலுள்ள கத்தோலிக்கர்கள் ஒல்லாந்தரினால் துன்புறுத்தப்படுவதைக் கண்டு அவர்களைப் போர்த்துக்கீசரே பாதுகாக்க வேண்டுமென விரும்பினார். இம்மூன்று நோக்கங்களும் இவரது நூல் முழுவதும் பரவியிருத்தலைக் காணலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நூலைக் குவைறொஸ் சுவாமிகள் 1687-ம் ஆண்டு ஒக்ரோபரில் எழுதிமுடித்தார். 1688-ம் ஆண்டு ஜனவரியில் தணிக்கைச் சபையால் அனுமதியளிக்கப்பட்டது. இந்நூலின் தலைப்பே இது எழுதப்பட்டதன் நோக்கத்தினை தெளிவாக்குகின்றது. இலங்கையை மீண்டும் ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தார். இதனை நிறைவேற்ற போர்த்துக்கீச மன்னனையும் மக்களையும் தூண்டும் முயற்சியாக இந்நூல் அமைந்துள்ளது. போர்த்துககீசர் எக்காரணங்களினால் இலங்கையை இழந்தனர், அப்பிழைகளுக்கு யார் பொறுப்பாளிகளாக அமைந்தனர், இலங்கையைத் திரும்பவும் எவ்வாறு இலகுவாகக் கைப்பற்றலாம், என்பன போன்ற கருத்துக்கள் இந்நூலில் பொதிந்து காணப்படுகின்றன.

ஆறு பகுதிகளாக இந் நூல் பிரிக்கப்பட்டுள்ளது. முதற் பகுதி இலங்கையின் சுவாத்தியநிலை, மக்களது வாழ்க்கை முறை, பொருளாதாரநிலை, வெளிநாட்டுத் தொடர்புகள் ஆகியனவற்றைக் கூறுகின்றது. இரண்டு, மூன்று நான்கு ஐந்து ஆகிய பகுதிகள் இலங்கையில் போர்த்துக்கீசரின் அரசியல் சமய வரலாறுபற்றிக் கூறுகின்றது. ஆறுவது பகுதியில் இலங்கையில் போர்த்துக்கீசர் செய்த அட்டூழியங்கள் நிர்வாகச் சீர்கேடுகள் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் இலங்கையைத் திரும்பவும் கைப்பற்றி ஆளலாம் என்பதுபற்றியும் கூறப்பட்டுள்ளது.

இலங்கையைப் போர்த்துக்கீசர் இழப்பதற்குப் போர்த்துக்கல் மக்களோ அல்லது அரசனோ பொறுப்பல்லவென்றும் இலங்கையில் சேவை புரிந்த போர்த்துக்கீசப் போர்வீரர்களும் அதிகாரிகளுமே காரணம் என்றும் கூறியுள்ளார். அவர்களது திறமையின்மையும் ஊழல்களும் கொடுமைகளும் மதப்பரப்பும் நோக்கத்திற்குத் தடையாகவிருந்ததுடன் போர்த்துக்கலின் நன்மதிப்பையும் பாதிப்பதாக அமைந்திருந்தது எனக் கூறியுள்ளார்.

மல்வானை உடன்படிக்கையில் உறுதியளித்தபடி நாட்டின் நிர்வாக முறைகளுக்கும் வழமைகளுக்கும் மக்களது வாழ்க்கை



முறைகளுக்கும் ஏற்ப போர்த்துக்கீசரின் ஆட்சி நடைபெறவில்லையெனக் கூறியுள்ளார். மக்களின் விருப்பு வெறுப்புக்களைக் கவனியாது மதத்துவேஷம் கொண்டு துன்புறுத்தினர்களெனவும் குற்றம் சுமத்தியுள்ளார். இவர்கள் மேற்கொண்ட தண்டனைகளினால் மக்களின் வெறுப்பிற்குள்ளாக நேரிட்டது எனக் கூறியுள்ளார். ஈட்டிமுனையில் குழந்தைகளை எறிந்து ஏந்திக் கொன்றமை, ஆண்களை மல்வானையிலுள்ள பாலத்திலிருந்து ஆற்றில் உயிருடன் எறிந்து கொன்றமை, தாய்மாரைக் கொண்டு அவர்கள் பிள்ளைகளை உரலில் போட்டு இடிப்பித்தமை, பெண்களைச் சிரச்சேதம் செய்வித்தமை போன்ற கொடுமைகளே முடிவில் இறைவன் ஒல்லாந்தர் வடிவில் வந்து போர்த்துக்கீசரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றக் காரணமாகியது எனக் கூறியுள்ளார்.

குவைறொஸ் சுவாமிகள் இந்நூலை எழுதுவதற்குப் பலதரப்பட்ட மூலாதாரங்கள் உதவியாகவிருந்தன. முன்னரே குறிப்பிட்டபடி வண. சகோதரர் பஸ்ரோவின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்குக் கிடைத்த ஆதாரங்களும், இலங்கையைப் பற்றிப் போர்த்துக்கீசரால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்ட நூல்களும் உதவியாக அமைந்தன. இவ்வகையில் பரோஸ் கூற்றோவின் நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்குகின்றன. கூற்றோவின் நூல் பரோஸின் நூலைவிட அதிகம் வரலாற்றுண்மை வாய்ந்தனவென்று கூறலாம். பரோஸின் இலக்கிய நடையைப் போர்த்துக்கீசர் புகழ்ந்தாலும் கூற்றோவின் நூல் உண்மைச் சம்பவங்களை ஒளிவு மறைவின்றி நேரடியாக எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. பிரசுரிக்கப்படாத நூல்களில் புகோ, அந்தோனியோ டி பின் கய்ரோ. டாலொம்பா, பிரான்சிஸ்கோ, நிகரட்சோ ஆகியவர்களின் எழுத்துக்களைக் குறிப்பிடலாம். இலங்கையிலுள்ள கத்தோலிக்கக் குருமார்களால் அவ்வப்போது எழுதப்பட்ட விண்ணப்பக் கடிதங்களையும் தமது நூலிற் சேர்த்துள்ளார். இலங்கையில் பணிபுரிந்து கோவாவிற்கு ஓய்வு பெற்றுச் சென்றுள்ள நிர்வாகிகள், தளபதிகள், போர்வீரர்கள் ஆகியோரைப் பேட்டிகண்டு சேகரித்த விஷயங்களையும் தனது நூலிற் சேர்த்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குவைறொஸினது நூல் எழுதப்பட்டுள்ள நடையே குறைபாடுடையதாக விளங்குகின்றது. பல வசனங்கள் விளங்கிக் கொள்ள முடியாதவாறு சிக்கலானவையாக அமைந்துள்ளன. பல சந்தர்ப்பங்களில் முடிவில்லாத வசனங்கள் வாசகர்களின் பொறுமையைச் சோதிக்கின்றது போல் அமைந்துள்ளன. ஒரு வசனத்தைப் பலமுறை வாசித்துத் தெளிந்தே அதன் கருத்தை அறியக் கூடியதாகவுள்ளது. பிற ஆதார நூல்களிலிருந்து சில பகுதிகளை நேரடியாகவே தமது நூலில் சேர்த்துள்ளார். சில சந்தர்ப்பங்களில் பல விடயங்கள் பற்றிய சுவாமிகளின் தெளிவற்ற தன்மை வெளிப்பட்டு நிற்கின்றது.

இலங்கை வரலாற்றில் பதினேழாம் நூற்றாண்டில் புத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் இவரது நூலில் காணப்படவில்லை. போர்த்துக்கல் நாட்டில் பற்றுடையவர் என்பதனாலும், கத்தோலிக்கப் பாதிரியாகவிருந்தமையாலும் இலங்கை மக்களின் கண்களினூடாக ஆராய முற்படவில்லையெனலாம். கத்தோலிக்க மதத்தின்மீது மக்கள் அதிருப்தி கொண்டமைக்கு அதிகாரிகளின் கொடூரமான ஆட்சியே காரணமெனக் கூறுகின்றார். ஆனால் போர்த்துக்கீசரின் மதக் கொள்கையையும் பிரசார முறையினையும் ஆழ்ந்து நோக்கினால் இக் கருத்து எந்தளவிற்கு உண்மையானது என்பது புலனாகும். குவைறொஸ் தனது நூலில் சமயக் குருமார்களைக் கண்டிக்காமல் விட்டதில் வியப்பெதுவும் இல்லையெனக் கூறலாம்.

இவரது நூலில் பல உண்மைக்குப் புறம்பான விடயங்கள் கூறப்பட்டுள்ளன. 1640-ம் ஆண்டு நீர்கொழும்பில் உண்மையில் 3000 கண்டிப் போர்வீரர்கள் போர்த்துக்கீசரால் தாக்கப்பட்டதை 20,000 போர்வீரர்கள் தாக்கப்பட்டனர் எனக் கூறியுள்ளார். ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற யுத்த மொன்றில் ஏராளமான சிங்கள வீரர்கள் கொல்லப்பட்டு இரண்டொரு போர்த்துக்கீசர் மாத்திரமே இறந்தனர் எனவும் கூறியுள்ளார். அசவிடோவின் கண்டிப் படையெடுப்பின் போது இறந்த போர்த்துக்கீசப் போர்வீரர்



களின் எண்ணிக்கை ஒரு சிறிய தொகையேயெனக் கூறுகின்றார். போர்த்துக்கீசரின் ஆட்பலம் குன்றியிருந்த காலத்தில் இவ்வெண்ணிக்கை மிகுந்த நஷ்டமாகவிருந்திருக்கும். இவ்விதம் கூறுவதிலிருந்து போர்த்துக்கீச ஆவணங்களை இவர் ஆராய்ந்திருக்கவில்லையெனக் கூறவேண்டியதாகவுள்ளது

நூலின் முதல் ஐந்து பகுதிகளிலும் தம்மைப் போர்த்துக்கல் தேசத்து ஊழியனாகக் கருதும் குவைறொஸ் சுவாமிகள் ஆறாவது பகுதியில் தமது நாட்டைச் சேர்ந்தவர்களைக் கண்டிக்கும் போது சங்கடமானநிலை அவருக்கு ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் பல முரண்பாடுகள் அவரது நூலிற் காணப்படுகின்றன. இவரது நூலில் நாலாவது பகுதியில் புகழப்பட்ட டயகோடி மெல்லோ ஆறாவது பகுதியில் மிகுந்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளார். கண்டியமன்னன் ஒல்லாந்தரின் உதவியை நாடியமைக்கு இத்தளபதியே காரணம் எனக் கூறியுள்ளார். ஆனால் நான்காவது பகுதியில் இதே தளபதி கண்டியமன்னனுடன் செய்து கொண்ட உடன்படிக்கைக்காகப் புகழப்பட்டுள்ளார். போர்த்துக்கீசர் இலங்கையை இழந்தமைக்கு ஆண்டவனின் அதிருப்தியே காரணம் எனப் பழிபோடுகின்றார். அத்துடன் ஒல்லாந்தர் வராமலேயே போர்த்துக்கீசர் இலங்கையை இழந்திருப்பர் எனக் கூறியுள்ளார். இவ்விதம் கூறும்போது ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளின் பலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றிச் சிறிதும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்தமையிலுள்ள குறைபாடுகளை மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார். அத்துடன் எவ்விதம் சிறந்த ஆட்சியையும் நிர்வாகத்தையும் அங்கு மீண்டும் ஏற்படுத்தலாமெனவும் கூறியுள்ளார். போதியளவு போர்த்துக்கீசப் படையை இலங்கையில் வைத்திராமையினால் அந்நியராட்சியை ஏற்கச் செய்வதற்கும், கண்டிக் கலகக் காரர்களின் ஊடுருவல்களைத் தடுக்கவும் இயலாது

www.tamilarangam.net



போய்விட்டதென்றும் கூறியுள்ளார். படைத்தலைவர்கள் ஒவ்வொருவரும் போதியளவு அனுபவம் பெற்றிருக்கவில்லை. அவர்களின் திறமை, அனுபவம், பதவியுயர்வு அளிக்கப்படும்போது கவனிக்கப்படவில்லை. அசவிடோ மட்டுமே அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளித்தார் என்றுள்ளார். கலகக்காரர்களுக்குப் போதியளவு தண்டனைகள் வழங்கப்படாமையினால் மற்றவர்களும் துணிந்து கலகத்திலீடுபட்டனர். அத்துடன் ஒத்துழைத்தவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படவில்லையெனவும் சுட்டிக்காட்டினார். தாழ்நாட்டில் போதியளவு ஆயுதங்களின்றிக் கண்டிமீது படையெடுப்புக்களை மேற்கொண்டதால் எண்ணற்ற போர்த்துக்கீசப் போர்வீரர்களை இழக்க நேரிட்டது எனக் கூறியுள்ளார். இலங்கை முழுவதையும் தமது ஆணைக்குள் கொண்டுவருவதில் ஏற்பட்ட தாமதத்தினையும் சுட்டிக் காட்டியுள்ளார். கண்டியர்கள் நவீனயுத்த முறைகளை விளங்கிக் கொள்ளாத நிலையில் கரையோரப் பிரதேசங்களில் அமைதி நிலவிய காலத்தில் இந்தியாவில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கண்டியைக் கைப்பற்றியிருக்கலாம் எனக் கூறுகின்றார். குவைறோஸ் இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சி பற்றித் தெளிவான அறிவைப் பெற்றிருந்தார் என்பதில் ஐயமில்லை.

குவைறோஸினது நூலில் போர்த்துக்கீசரது ஆட்சியின் இறுதிக்காலம் விபரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட சமகாலத்தில் எழுந்த நூலாதலால் உண்மையான விஷயங்கள்பல அடங்கியிருக்கின்றன. உண்ணாட்டில் போர்த்துக்கீசர் ஆட்சி சீர்குலைந்தமைக்குரிய காரணங்களைக் கூறும் விதம் அனுபவ உண்மை வாய்ந்தனவாகவும் பாராட்டக் கூடியதாகவும் அமைந்துள்ளன. போர்த்துக்கீச நிர்வாகிகளின் போக்கு, நிர்வாக ஊழல்கள், நிர்வாகத் திறமையின்மை, கடலாதிக்கப் பலக் குறைவு, போர்த்துக்கலிலிருந்து உதவிகள் கிடைக்காமை, ஆகியன மிகவும் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. யுத்தகாலத்திலும் சமாதானகாலத்திலும் சிங்களவர்கள் கொடுமைப்படுத்தப்பட்டு எதிரிகளாகவே நடாத்தப்பட்டனர் எனக் கூறியுள்ளார்.



குவைறோஸ் சுவாமிகள் தமது நூலில் சில பகுதிகளை மிகைப்பட வர்ணித்தாலும் இந்நூல் இலங்கையில் போர்த்துக்கீசரின் வரலாற்றையறிய இன்றியமையாத நூலாக விளங்குகின்றது. இந்நூலில கூறப்பட்டுள்ள கருத்துக்களே இக் காலத்தைப் பற்றியெழுந்த மற்றைய நூல்கள் வேறு பாஷையில் கூறுகின்றன. இலங்கையில் போர்த்துக்கீசர் ஆட்சியின் இறுதிக் கட்டத்தின் ஆத்மீகத் தலைவராகக் குவைறோஸ் சுவாமிகள் விளங்குகின்றார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குவைரோஸின் நூலிலிருந்து......

## சமுதாய அமைப்பு, ஆட்சிமுறை; குறைபாடுகள்

லொறன்ஸோ டி அல்மேடாவினுல் அனுப்பப்பட்ட தூதுக்குழு சிங்களவர்களின் தந்திரத்தால் திரும்பத்திரும்ப ஒரேயிடத்தையும் ஒரே நதியையும் பலதடவைகள் கடக்க நேரிட்டது. ஆனுல் கப்பலிலிருந்து கேட்ட பீரங்கிச் சத்தம் அவர்களுக்கு உண்மையான தூரத்தை உணர்த்தியது.

x x x x

சிங்களவர்கள் கர்வமுள்ளவர்கள், ஆடம்பரமானவர்கள், சோம்பேறிகள். அவர்கள் தங்களைத் தேவலோகத்திய வம்சத்தவர்களெனவும், பண்டைய அரசவம்சத்தினரெனவும் எண்ணுபவர்கள்.

x x x x

தமது நாட்டிலுள்ள செல்வங்களினுல் விவசாயத்தில் அக்கறையின்மையும் பணம் சேகரிக்க வேண்டுமென்ற அவாவின்மையும் உடையவர்களாயிருந்தனர். மூன்று லறின்கள் கிடைத்தவுடன் தம்மைச் செல்வந்தர்களாக நினைத்துப் பெரும் எண்ணங்களைக் கொண்டிருப்பர்;

x x x

சிங்களவர்களது உடை தகுதிக்கேற்ப அமைந்திருக்கும். சிவப்பு நிறத் தொப்பியையும், போர்த்துக்கீசரின் மேல் சட்டையையும் விரும்பி அணிவர். தொப்பிகளில்லாத விடத்து வெள்ளைத் துணியால் தலைப்பாகை போன்றவிதத்தில் அணிவர்.

x x x x

சுதேச அரசர்களுக்குச் சிங்களவர்கள் கீழ்ப்பணிந்து நடப்பர்; ஆனுல் அந்நியராட்சியை ஏற்க இணங்காதவர்கள். போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்தவுடன் தமது எதிர்காலத்தையும், அடிமைத்தனத்தையும் உணர்ந்து சுதந்திரத்தைத் திரும்பவும் பெறக் கலகங்களிலீடுபட்டனர்.



களவுகள் நடைபெறுவதில்லை: வீட்டுக் கதவுகளுக்குப் பூட்டுக்களை உபயோகிப்பதில்லை. இவர்களின் நேர்மையைச் சோதிப்பதற்கு முதலாம் இராஜசிங்கன் மந்தைகளை வயலில் தங்கவளையல்கள் கழுத்திலணியும் ஆபரணங்களுடன் உலாவ விட்டான் என்று கூறப்படுகின்றது.

x x x x

சிங்களவர்களது பிரதான தொழில் போர்புரிதலாகும். தற்காலிகமாகவே சமாதானத்தை அனுபவிப்பர்: யுத்த ஈடுபாடுகளால் சாவுக்குப் பயமில்லாதவர்களாக வீரம்மிக்க ஒழுக்கமுள்ளவர்களாக மாறியுள்ளனர். போர்த்துக்கீசருடன் மேற்கொண்ட இடையருயுத்தங்களினுல் சிங்களப் போர்வீரர்கள் ஐரோப்பிய யுத்த முறைகளில் பயிற்சி பெறக் காரணமாகியது. இதனுல் அவர்களால் இயலாதது ஒன்றுமில்லை என்ற அளவிற்கு வலிமைபெற்றுள்ளனர்.

x x x x

யுத்த காலங்களில் சிங்களவர் கிளர்ச்சிக்காரர்கள் அடிமைகள் போன்று நடாத்தப்பட்டனர். தாய்மார்களைக் கொண்டு அவர்களது குழந்தைகளை உரலில் போட்டு அக்குழந்தைகளின் பரிதாபத்தையும் பாராமல் இடிப்பித்தார்கள்.

x x x x

போர்வீரர்கள் குழந்தைகளை ஈட்டிமுனைகளில் எறிந்து ஏந்தி அக்குழந்தைகளின் அழுகுரலையும் பரிதாபத்தையும் பாராது கொன்றனர். ஆண்களை மல்வானைப் பாலத்திலிருந்து ஆற்றில் எறிந்து கொன்றனர்.

x x x x

சிங்களவர்கள் சில சமயங்களில் கைப்பற்றிய போர்த்துக்கீச சிங்கள யுத்தக் கைதிகளின் காதுகள் மூக்குகளை வெட்டி அங்கவீனம் செய்தாலும் கிறிஸ்தவ கோட்பாட்டிற் கமையப் பழிக்குப் பழி வாங்குதலைத் தவிர்த்திருக்க வேண்டும்.

x x x x

இலங்கையிலுள்ள போர்த்துக்கீசர் தம்மை அரசர்களாகவும் வரையற்ற இளவரசர்களாகவும் கருதி ஒழுக்கயீனம், களவுகள், கொடுமைகள் ஆகியவற்றில் ஈடுபட்டனர்.

இ. வ. தொ. 7

www.tamilarangam.net



x x x x

போர்த்துக்கீசர் தமது ஆதிக்கத்தினை நிலைநாட்டியவுடன் ஒவ்வொரு திசாவனியிலும் ஒரு சிங்களவரை விதானையாக நியமித்து மாகாண நிர்வாக அலுவல்கள் சிலவற்றை யளித்தனர்.

x x x x

நான்கு திசாவைகளின் கீழும் போர்த்துக்கீசர் ஆட்சியின் இறுதி யாண்டுகளில் 4700க்கு மேற்பட்ட போர்வீரர்கள் அல்லது கூலிப் படையினர் இருந்தனர். மாத்தறையில் 1500 பேரும், சப்பிரகமுவாவில் 200 பேரும் ஏழுகோறளையில் 1800 பேரும், நான்கு கோறளையில் 1200 பேருமிருந்தனர். மாத்தறையிலுள்ள கூலிப் படையினரே யுத்தங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

x x x x

இலங்கை முழுவதையும் போர்த்துக்கீசர் இழப்பதற்கு மேலதிக அபிலாசையும், முறையற்ற ஆட்சியுமே காரணமாகவிருந்தது. பெரும்பாலான தளபதிகள் தமது பதவிகளை நீடித்துப் பாதுகாப்பதிலேயே அதிக கவனம் கொண்டிருந்தனர்.

x x x x

இலங்கையில் அனுபவமுள்ள போர்வீரர்கள் இருந்தும் தலைமைப் பதவிகள் ஒரு சிலருக்கே வழங்கப்பட்டன. உயர் பதவிகளைத் தமது நண்பர்களுக்கும், அறிமுகமானவர்களுக்குமே தளபதிகள் வழங்கினர்.

x x x x

## இலங்கையைக் கைப்பற்றியதில் விட்ட பிழைகள்

(சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.)

போதியளவு போர்த்துக்கீசப் படையை இலங்கையில் வைத்திருக்காமை. அந்நியராட்சியை ஏற்கச் செய்வதற்கும் கண்டியக் கலகக்காரர்களை அடக்கவும் இது அவசியமாயிருந்தது.

x x x x

படைத் தலைவர்கள் போதியளவு அனுபவம் பெற்றிருக்கவில்லை. தலைமைப் பதவிகள் அனுபவம், திறமை யடிப்படையில் வழங்கப்படவில்லை. கொன்ஸ்தான்டிசாவின் தோல்விக்கு இதுவே காரண



மாகவிருந்தது. அசெவிடோ மட்டும் அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளித்தார்.

x x x x

கலகக்காரர்களுக்குப் போதியளவு தண்டனைகள் வழங்கப்படவில்லை. இதனால் மற்றவர்களும் துணிந்து கலகத்தில் ஈடுபட்டனர். அத்துடன் ஒத்துழைத்தவர்களுக்கு வெகுமதிகளும் வழங்கப்படவில்லை.

x x x x

கண்டிமீது படை யெடுப்புக்களை மேற்கொண்டபோது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இத் தவறுகளால் எண்ணற்ற போர்த்துக்கீசப் போர்வீரர்களை யிழக்க நேர்ந்தது.

x x x x

போர்த்துக்கீசர் போதியளவு பாதுகாப்புப் படையைக் கொண்டிருக்கவில்லை. இதனால், கண்டியரின் எதிர்ப்புக்களையும், கலகக்காரர்களையும் இலகுவில் அடக்க இயலாமற் போய்விட்டது.

x x x x

போர்த்துக்கீசத் திறைசேரியையே நம்பியிருந்தமை. போர்த்துக்கீச அரசனிடமிருந்தே, ஆட்பலம், பணம், யுத்தகாலத்திலும், சில சமயங்களில் சமாதான காலத்திலும் எதிர்பார்த்திருந்தமை, ஆனால் அரசனது திறைசேரிக்கு இலங்கையிலிருந்து போதியளவு பணம் அனுப்பப்படவில்லை.

x x x x

இலங்கை முழுவதையும் கைப்பற்றுவதில் போர்த்துக்கீசர் தாமதத்தை ஏற்படுத்தினர். கண்டியர்கள் நவீனயுத்த முறைகளை நன்கு அறியமுன்னர், கரையோரப் பிரதேசங்களில் ஸ்திரமான ஆதிக்கம் நிலவிய காலத்தில், இந்தியாவில் யுத்த ஈடுபாடுகளைத் தவிர்த்துக் கண்டியைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | சொல் | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | — | — | வரலாற்றுத் |
| 5 | 31 | 6 | வாழ்ந்த |
| 6 | 23 | 3 | உண்மை |
| 7 | 28 | 3 | கண்டியின் |
| 9 | 7 | 4 | அனுமதிப்பதில்லை |
| 10 | 20 | 4 | அந்நிய |
| 11 | 5 | 2 | வயிற்றினை |
| 13 | 17 | 6 | நோக்கத்திற் |
| 13 | 22 | 4 | கீழ்ச் |
| 15 | 3 | 3 | பொதுச் |
| 17 | 31 | 1 | ஒல்லாந்தப் |
| 18 | 31 | 1 | ஒல்லாந்தரின் |
| 20 | 28 | 1 | தினப்பதிவேட்டிலிருந்து |
| 26 | 5 | 4 | பதினறுங்கு |
| 34 | 16 | 3 | ஒழுக்கவீனங்களிற் |
| 47 | 2 | 1 | மிகைபட |


அடுத்த வெளியீடு!

**"இலங்கை வரலாற்றில்"**
**ஐந்து நூற்றாண்டுகள்**

16-ம் நூற்றாண்டு தொடக்கம் 20-ம் நூற்றாண்டு வரை

பன்னிரண்டு விடயங்கள்
விரிவாக விளக்கப்பட்டுள்ளன.


ஸ்ரீ லங்கா அச்சகம், 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Sri Lanka Printing Works. Jaffna.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்